விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 07 செவ்வாய்க்கிழமை (23.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்

❖ சிகரட், மதுபானம் வரி அதிகரிப்பு ❖ தொலைபேசி கட்டணம் குறைப்பு
❖ தனியார் துறைக்கு ஓய்வூதியம் ❖ பாதுகாப்பு அமைச்சுக்கு 1500 தாதிகள்

மொத்த வருமானம் 986.1 பில்., மொத்த செலவீனம் 1 419.9 பில்., துண்டுவிழும்தொகை 433.7 பில்.

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

# அரச ஊழியர்களுக்கு அலவன்ஸ்!


## வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி முன்மொழிவு

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறாத அரச ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு சேவை ஊழியர்களது மாதாந்த கொடுப்பனவை 5 வீதமாக உயர்த்தவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளு மன்றத்தில் தெரிவித்தார். 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஆயிரத்து 500 பட்டதாரிகள் நிதி நிறுவகங்கள் மற்றும் அரச வங்கிகளுக்கு முகாமைத்துவ பயிற்சியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட வுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் 1500 தாதிகள் உள்வாங்கப்படுவர். பொறியியல், விவசாயம் மற் றும் ஏனைய பிரிவுகளை சேர்ந்த 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள் ளது. தனியார் துறையினருக்கு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.இந்த ஓய்வூ தியம் பெறுவதற்கு தனியார் துறையில் குறைந்தது 10 வருடங்கள் பணியாற்றியிருக்க வேண் டும்.பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மற்றும் அரச ஊழியர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியத்துக்கு உட் படாத ஐந்து சதவீத மாதாந்த அலவன்ஸ் வழங்கப்படும். (20ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 85ஆவது அவதார தினம் இன்று.

சிறப்பு மலர் உள்ளே... 10

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 2011-ம் நிதியாண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரை 04



ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவிக்கும் இரா.சம்பந்தன்

## புதிய அமைச்சரவையில் மூன்று முகங்கள் நீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பத விப் பிரமாணம் எடுத்துக்கொண்ட அமைச்சர் கள் மற்றும் பிரதியமைச்சர்களில் பழைய முகங்கள் மூவர் விடுபட்டுள்ளனர்.அவர்களில் ஒருவர் அமைச்சராகவும் மற்றைய இருவரும் பிரதியமைச்சர்களாகவும் செயற்பட்டிருந்தார் கள்.

அமைச்சராக இருந்தவர் முன்னை நாள் மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர் ணான்டோ ஆகும். இம்முறை அவரது பதவி குணரத்ன வீரக்கோனிடம் கையளிக்கப்பட் டுள்ளது. இடதுசாரியான குணரத்ன வீரக் கோன் தமிழ் மக்கள் மீது நியாயமான புரிந் துணர்வை கொண்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

விடுபட்டுள்ள ஏனைய இருவரும் பிரதி யமைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதியில்லை

(கொழும்பு)

இலங்கையின் வட கடலில் இந்திய மீன வர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் என்ற ரீதியில் வருடத்தில் ஏறக்குறைய 70 நாட்கள் மீன்பிடிப்பதற்கு இடையூறில்லாத அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை தாம் ஏற்கவில்லை என யாழ்.மாவட்ட மீனவர் சங்கத்தின் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் மறுத்துரைத்திருக்கின்றார்.

இலங்கை கடற் பரப்பில் இழுவைப் படகு களில் மீன்பிடிக்கின்ற இந்திய மீனவர்கள் கடல் வளங்களை அழித்துச் செல்லும் வகை யிலான (20 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுக்கு வழங்க மறுத்ததை வேறு எவருக்கும் கொடுக்க மாட்டேன்

## த இந்துவுக்கு ஜனாதிபதி பேட்டி

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொடுக்க மறுத்ததை ஏனையோருக்கும் கொடுக்க மாட்டோம்–தனி நாட்டுக் கோரிக்கையை தமிழ் தேசிய கூட்ட மைப்பு கைவிட்டிருப்பது மிகவும் முக்கிய மான விடயமாகும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

த இந்து ஆங்கில நாளிதழுக்கு வழங்கி இருக்கும் விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார். இவர் இப் பேட்டியில் முக் கியமாகத் (20 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

திரு.ஆ.சி.நடராசாவின்

# "வரலாற்று உலா"

## நூல் வெளியீடும் மானிடநேயர் விருது வழங்கலும்

இடம் : யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம் : 24.11.2010 புதன்கிழமை

நேரம் : பி.ப. 4.00 மணி

தலைமை : மருத்துவர் சி.யமுனானந்தா
(ஆலோசகர் சிவத்தமிழ் மானிடவியற் கழகம்)

பிரதம விருந்தினர் : பேராசிரியர் இ.குமாரவடிவேல்

### நிகழ்ச்சி நிரல்

- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- வெளியீட்டுரை :
  *பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்*
- முதற் பிரதி பெறுபவர் :
  *திரு.ரி.கேசவராஜா*
  (பணிப்பாளர் தினக்குரல்)
- ஆய்வுரை
- மானிடநேயர் விருது வழங்கல்
- சிறப்புரை :
  *பேராசிரியர் ப.சிவநாதன்*
- ஏற்புரை :
  *திரு.ஆ.சி.நடராசா*
- நன்றியுரை

(சி–1660) **சிவத்தமிழ் மானிடவியற் கழகம்**


## வடமராட்சியில் காணிகள் விற்பனைக்கு

- நெல்லியடி நகரில் 3 3/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- நெல்லியடி கொடிகாமம் வீதியில் திரு இருதயக் கல்லூரிக்கு அருகில் 2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
- மந்திகை, வல்லிபுரக் கோவில் வீதியில் உபய கதிர்காமத்தில், 8 1/4 பரப்பு காணியும் சகல வசதிகளும் அடங்கிய மிகப்பெரிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 021 3735292

(சி–1659)


# புதிய அமைச்சரவை அமைச்சர்கள்




## விற்பனைக்கு

Mitshubisi Lancer Box Car 12XXXX Full AC, Auto Glass, Alloy Wheels உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0778760905

(சி–1662)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :– 0770452612

(3103)

செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30


**சிரேஷ்ட அமைச்சர்கள்**

தி.மு.ஜயரட்ண–புத்தசாசன மதவிவகாரம்,
ரட்ணசிறி விக்கிரமநாயக்க–நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு,
அதாவுட செனவிரட்ன–கிராமிய விவகாரங்கள் ,
டியூ குணசேகர –மனிதவள அமைச்சு ,
பி.தயாரட்ண –உணவு மற்றும் போஷாக்கு,
ஏ.எச்.எம்.பௌசி –நகர அபிவிருத்தி ,
எஸ்.பி.நாவின்ன –நுகர்வோர் நலன் ,
பியசேன கமகே –தேசிய வளம்,
திஸ்ஸ விதாரண–விஞ்ஞான விவகாரம்,
சரத் அமுனுகம –சர்வதேச நிதி திட்டமிடல்

**அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள்**

நிமல் சிறிபால டி சில்வா –நீர்ப்பாசன நீர்வளம் மற்றும் முகாமைத்துவம்
மைத்திரிபால சிறிசேன –சுகாதாரம்
சுசில் பிரேமஜயந்த –பெற்றோலிய வளத்துறை
ஆறுமுகன் தொண்டமான் –கால்நடை,கிராமிய சமூக அபிவிருத்தி
தினேஷ் குணவர்த்தன –நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு
டக்ளஸ் தேவானந்தா –பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி
ஏ.எல்.எம்.அதாவுல்லா –உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபை
ரிஷாட் பதியுதீன் –வர்த்தக மற்றும் முதலீட்டு விவகாரம்
பாட்டலி சம்பிக்க ரணவக்க –மின்சக்தி மற்றும் எரிசக்தி
விமல் வீரவன்ச –வீடமைப்பு, பொறியியல் நிர்மாணத்துறை
ரவூப் ஹக்கீம் –நீதியமைச்சு
பஷில் ராஜபக்ஷ –பொருளாதார அபிவிருத்தி
வாசுதேவ நாணயக்கார–தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்கம்
எஸ்.பி.திஸாநாயக்க –உயர்கல்வி
ஜி.எல்.பீரிஸ் –வெளிவிவகாரம்
டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன–பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள்
சுமித்திரா ஜி.ஜயசேன–நாடாளுமன்ற விவகாரம்
ஜீவன் குமாரதுங்க –தபால் சேவைகள்
பவித்திரா வன்னியாராய்ச்சி–தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி
அநுர பிரியதர்ஷன யாப்பா –சுற்றாடல் விவகாரம்
திஸ்ஸ கரலியத்த –சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகாரம்
காமினி லொக்குகே–தொழில் மற்றும் தொழில் உறவுகள்
பந்துல குணவர்த்தன–கல்வி
மகிந்த சமரசிங்க –பெருந்தோட்ட கைத்தொழில்
ராஜித சேனாரட்ன–மீன்பிடி மற்றும் நீரியல்வளம்
ஜனக பண்டார தென்னக்கோன்–காணி மற்றும் காணி அபிவிருத்தி
பீலிக்ஸ் பெரேரா –சமூக சேவைகள்
சி.பி.ரத்நாயக்க –தனியார் போக்குவரத்து சேவைகள்
மகிந்த யாப்பா அபயவர்த்தன–விவசாயம்
கெஹலிய ரம்புக்வெல –வெகுஜன ஊடக மற்றும் தகவல்
குமார வெல்கம– போக்குவரத்து
டலஸ் அழகப்பெரும–இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன் விருத்தி
ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ–கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர்
சந்திரசிறி கஜதீர –புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு
சலிந்த திஸாநாயக்க –சுதேச மருத்துவம்
ரெஸினோல்ட் குரே –சிறுஏற்றுமதிப்பயிர் ஊக்குவிப்பு
டிலான் பெரேரா –வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி சேவைகள்
ஜெகத் புஸ்பகுமார–தென்னை அபிவிருத்தி மற்றும் ஜனதா தோட்ட அபிவிருத்தி
டி.பி.எக்கநாயக் கலாசாரம் மற்றும் கலைகள்
மகிந்த அமரவீர– அனர்த்த முகாமைத்துவம்
எஸ்.என்.சந்திரசேன –கமநலசேவைகள் மற்றும் வனவிலங்கு
குணரத்ன வீரகோன் –மீள்குடியமர்தல்
மேர்வின் சில்வா–பொதுசன உறவுகள் மற்றும் பொதுசன விவகாரங்கள்
மகிந்தானந்த அளுத்கமகே–விளையாட்டுத்துறை
தயாசிறி திசேர– அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி
ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய–தொலைத்தொடர்புகள்மற்றும்தகவல்தொழில்நுட்பம்
டாக்டர் ஜகத் பாலசூரிய –தேசிய மரபுரிமை
லக்ஷ்மன் செனவிரட்ன–உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு
நவீன் திஸாநாயக்க –பொது முகாமைத்துவ சீர்திருத்தம்

## இராணுவ புதைகுழி இன்று தோண்டப்படும்


கடற்படை மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 26 வீரர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கிளிநொச்சி வல்லிபுரம் பிரதேச பாரிய புதைகுழி இன்று செவ்வாய்க்கிழமை தோண்டப் படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

இதற்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த பொலிஸ் குழு வொன்றுடன் இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள், அகழ்வாராய்ச்சி திணைக்கள அதிகாரிகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சி நோக்கிப் பயணித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார். (ச–5)

# நீங்கா நினைவில் பதினைந்தாண்டுகள்



மறைவு
23
11
1995



தோற்றம் : 03.11.1941

**அமரர் கனகசபை சண்முகசுந்தரம்**
உரிமையாளர் சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

தோற்றம் :18.08.1983

**அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்**
மாணவன் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி

மின்னாமல் முழங்காமல் மடிவுமழை அடித்து
அன்புத் தலைவனை இளவலைப் பறித்து
துன்பத்திலெமை இருத்தினும் ஆண்டுகள் மூவைந்து
என்றும் இருவரும் எம்மிதயத்தில் இருப்பர்.

29, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

(சி–1663)

# இன்று ஒரு தகவல்

## நன்னயம்

ஒருத்தன் தவறு செய்து விட்டான் என்றால் உடனே நாம் என்ன செய்வோம்? கையை ஓங்கிக் கொண்டு அவனை அடிக்கப் போவோம்.

ஆனால் பெரியவர்களெல்லாம் அப்படி நடந்து கொள்வதில்லை.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்று வள்ளுவர் சொன்னார். அதற்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்வார்கள்.

பாயஸீத் பிஸ்தாமி என்ற ஒரு பெரிய ஞானி இருந்தார். அவர் ஒரு நாள் இரவு நீண்ட நேரம் மசூதியில் இருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

வழியில் ஒரு குடிகாரன் கையில் ஒரு இசைக்கருவி வைத்து மீட்டிக் கொண்டு வழியில் போகிறவர்கள் வருபவர்களையெல்லாம் திட்டிக் கொண்டிருந்தான்.

பாயஸீத் அந்த வழியாகப் போனார். அவனுடைய நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டார். "ஏனப்பா இப்படியெல்லாம் நடந்து கொள்ளலாமா?" என்று புத்திமதி சொல்ல ஆரம்பித்தார்.

அவனுக்குக் கோபம் வந்து விட்டது. கையில் வைத்திருந்த வாத்தியக் கருவியால் ஓங்கி அந்தப் பெரியவரின் தலையில் அடித்து விட்டான். இரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது.

அவனுடைய கையிலிருந்த இசைக் கருவியும் அடித்த வேகத்தில் இரண்டாக உடைந்து விட்டது.

இவ்வளவு தூரத்திற்கு நடந்தும் கூட அந்த மாபெரும் ஞானி வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடக் கதைக்கவில்லை. பேசாமல் தலையைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்.

மறுநாள் அந்தப் பெரியவர் என்ன செய்தார் தெரியுமா?

இனிப்புப் பண்டங்கள், பணம் இவையிரண்டையும் ஒரு ஆள் மூலம் அந்தக் குடிகாரனுக்கு அனுப்பி வைத்தார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன விபரமென்று விசாரித்தான். வந்த ஆள் ஒரு கடதாசியை நீட்டினார். அதில் விபரம் இருந்தது. அந்த ஞானி எழுதியிருந்தார்.

உங்களுடைய இசைக்கருவி உடைவதற்கு என்னுடைய தலை காரணமாக இருந்து விட்டது. அதற்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன். அதற்காகத்தான் பணம் அனுப்பியிருக்கிறேன். புதிதாக ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள்.

அதன்பின் இன்னொரு விடயம். நேற்று இரவு என்னிடம் ஏகப்பட்ட கசப்பான வார்த்தைகளை நீங்கள் பேசியதாக நினைக்கிறேன். இத்துடன் அனுப்பியிருக்கும் இனிப்புப் பண்டங்களை சாப்பிட்டு விட்டு உங்கள் நாவிலுள்ள கசப்பை மாற்றிக் கொள்ளுங்கள் என்று அந்தக் கடதாசியில் எழுதியிருந்தது.

இந்தச் சமயத்தில் அவன் குடிமயக்கத்தில் இல்லை. தெளிவாக இருந்தான். அதைப் படித்தவுடன் அவனுக்கு மிகவும் வெட்கமாகிவிட்டது.

தலையைக் குனிந்து யோசித்தான்.

சிறிது நேரத்தில் நண்பர்கள் சிலரைக் கூட்டிக் கொண்டு அந்த ஞானி இருக்கும் இடம் தேடிச் சென்றான்.

அவரிடம் மன்னிப்புக் கேட்டான்.

"பெரியவரே! தெரியாமல் நான் இந்தப் பாவச் செயலைச் செய்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பொறுமையும் போதனையும் என்னுடைய கண்ணைத் திறந்து விட்டது. இனிமேல் நானும் என்னுடைய நண்பர்களும் நல்ல வழியில் திருந்தி வாழப்போகிறோம்" என்றான்.

ஞானி செய்த 'நன்னயம்' குடிகாரனை எப்படி மாற்றியிருக்கிறது பார்த்தீர்களா? இந்தக் கதையைக் கேட்டுவிட்டு ஒருத்தர் சொன்னார்: என் வாழ்க்கையில் கூட அப்படியொரு சம்பவம் நடந்தது சேர். நானும் ஒருநாள் ஓவராகக் குடித்து விட்டு ஒரு கிற்றாரை வைத்து உளறிக் கொண்டு திட்டிக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயம் அந்த வழியாக ஒருத்தர் வந்தார். ஓங்கித் தலையில் ஒரே அடி. இரத்தம் வந்து விட்டது. அதன்பின் என் மனம் திருந்தி விட்டது சேர்" என்றார்.

"அப்படியா?" என்றேன் ஆச்சரியமாக!

"ஆமாம் சேர்! அடிவிழுந்தது அவருடைய தலையில் இல்லை சேர். என் தலையில். வந்தவர் என்னை அப்படி அடித்து விட்டார் சேர். மயக்கம் தெளிந்த பின்தான் எனக்கு விபரம் புரிந்தது. அவர் ஒரு பொலிஸ்காரர் என்று" என்றார் மிகவும் சோகமாக!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கணனி வன்பொருள் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாண பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதியன்று 16 தொடக்கம் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

இதற்கு தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சுய மாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து மாவட்ட முகாமையாளர், நைற்றா, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு இத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ண பாலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விஞ்ஞானக்கருத்தரங்கு

யாழ். விஞ்ஞான சங்கத்தின் *ஏ* பிரிவின் அனுசரணையுடன் படை அமைப்பிலான இரட்டை ஐதரொக்சைட்டுகள் பற்றிய இலவசக் கருத்தரங்கு இன்று செவ்வாய்கிழமை மாலை 2.30 மணிக்கு இரசாயனவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையை யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் திருமதி. இ. மகேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

இதில் ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்குமாறு யாழ். விஞ்ஞான சங்க *ஏ* பிரிவின் செயலாளர் கலாநிதி கு.வேலாயுதமூர்த்தி கேட்டுக் கொள்கிறார். (ஸ்ரீ-2)

# யாழ்.மிருசுவில் ரயில் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டால் யாழ்ப்பாணம் மிருசுவில் ரயில் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண சபை இதற்காக 20 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மிருசுவில் பிரதேசத்திற்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிடவுள்ளனர்.

ரயில் நிலையத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கென 20 மில்லியன் ரூபாவுக்கான காசோலையை அன்றைய தினம் மத்திய மாகாண முதலமைச்சர் டிக்கிரி கொப்பேகடுவ தன்னிடம் கையளிக்கவுள்ளதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்தார்.

ரயில் நிலைய நிர்மாணப் பணிக்கான கேள்விப்பத்திரம் வடமாகாண சபையினால் வெகுவிரைவில் கோரப்படவுள்ளதாகவும் மூன்று மாத காலத்திற்குள் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# இராசி பலன்

*23.11.2010*
*(கார்த்திகை 7, செவ்வாய்கிழமை)*
*துதியை முன்னிரவு 11.15 மணிவரை*
*ரோகிணி முற்பகல் 9.26 மணிவரை*
*இராகுகாலம் 3.11-4.41 மணிவரை*
*சுபநேரம் 10.41-12.11 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள விரும்புவீர்கள், உயரதிகாரிகளிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**இடபம்** பிறரால் பெருமை சேரலாம், தொழில் நலன்கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், திட்டமிட்ட காரியத்தில் மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.

**மிதுனம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் சிறு மாற்றம் ஏற்படலாம், தொழில் விருத்தியுண்டு.

**கடகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உத்தியோகத்தில் உயர்வான நிலை காணப்படும்.

**சிங்கம்** தொழிலில் புதிய திட்டங்களை வகுப்பீர்கள், ஆரோக்கியமான நாள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துபசாரமுண்டு.

**கன்னி** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் உங்களை விட்டு விலகுவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம், தந்தை வழி உறவினர்கள் மூலம் அனுகூலங்கள் ஏற்படலாம்.

**துலாம்** துயரங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும், காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் சிறிது குறைவடையலாம்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கலாம், தொழில் நன்மை கருதி புதிய கூட்டாளிகளை சந்திக்கும் வாய்ப்புண்டு, மாதர் வழி நன்மையுண்டு.

**தனுசு** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கடன் தொல்லைகள் சுமுகமாக அமையும், வருங்காலத்திற்கான சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**மகரம்** பிள்ளைகளால் சிறு வருமானங்கள் கிடைக்கலாம், சொத்துக்களால் நன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் சில சம்பவங்கள் நடக்கலாம், தொழில் வளர்ச்சியுண்டு.

**கும்பம்** தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதரவு கிடைக்கலாம், சென்ற இடத்தில் கௌரவமான நிலை அமையலாம், எதிர்கால நலன்கருதி சில செலவுகளை மேற்கொள்ள வேண்டி வரலாம்.

**மீனம்** சுவாரஸ்யமான நாள், தடைப்பட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கலாம், சகோதரர் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர், வருமானம் அதிகரிக்கும்.

வளவன்

# வரலாற்று உலா நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ் மானிட விடியற்கழகத்தினால் ஆ.சி. நடராசாவின் "வரலாற்று உலா" நூல் வெளியீடும் மானிடநேயர் விருது வழங்கல் நிகழ்வும் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் சிவத்தமிழ் மானிடவியற் கழக ஆலோசகர் மருத்துவர் சி. யமுனானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் இ. குமார வடிவேல் கலந்து கொண்டு சிறப்பிப்பார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 150 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 70 | 80 | 110 |
| கறிமிளகாய் | 120 | 140 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 180 |
| போஞ்சி | 120 | 150 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப நிகழ்காலத்தினை முகாமை செய்வோம்

## நாடாளுமன்றில் ஜனாதிபதி உரை



2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிகழ்த்திய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது,

கௌரவ சபாநாயகர் அவர்களே! நீங்கள் இந்த நாடாளுமன்றத்திற்கு தலைமை வகித்துக்கொண்டிருப்பது போல காலஞ்சென்ற எனது தந்தை டி.ஏ.ராஜபக்ஷ அவர்கள் ஒருபோது பிரதி சபாநாயகராக உங்களது ஆசனத்தை அலங்கரித்திருந்த தோற்றம் எனது நினைவுக்கு வருகின்றது. இலங்கையினை ஆசியாவில் உண்மையாகவே சுதந்திரமடைந்த, செல்வச் செழிப்பான நாடாக மாற்றுவதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்காக அவர் காலஞ்சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டார நாயக்க மற்றும் பலருடன் எதிர்க்கட்சிக்கு மாறியதை நான் நினைவுபடுத்திப் பார்க்கின்றேன். இம் மாற்றமானது எமது தேசிய மரபுரிமைகள், கலாசாரம், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் எமது சொந்த அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எனினும் இப்பணியானது நிறைவேறாமற் போனது.

**சவால்கள் நிறைந்த நாடு**

கௌரவ சாபாநாயகர் அவர்களே, நான் ஜனாதிபதியாக பதவியேற்ற போது நாட்டில் எவ்வித ஸ்திரத்தன்மையும் காணப்படவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நிலையானது காணப்படவில்லை. சவால்கள் பல காணப்பட்டன. நாடு நீண்டகால யுத்தமொன்றின் நடுவில் சிக்கிப்போயிருந்ததுடன் இரண்டாகப் பிரியும் தறுவாயிலிருந்தது. பிரிவினைவாதம், பயங்கரவாதம், சமூகவாதம் மற்றும் வெளிநாட்டுத் தலையீடுகள் என்பவற்றினால் நாடு சூழப்பட்டிருந்தது.

எல்.ரீ.ரீ.ஈ. ஒரு வெற்றிகொள்ள முடியாத சக்தி என்ற கண்ணோட்டம் பிரசித்திபெற்றிருந்தது. எல்.ரீ.ரீ.ஈ. உடன் மோதுவது பாரியதொரு தவறாக கருதப்பட்டது. இந்தநாடு 2004ல் சுனாமியால் முழுவதுமாக நாசமாக்கப்பட்டது. எமது இயற்கைச் சூழல் பல வருடங்களுக்கு அழித்தொழிக்கப்பட்டது. வனவளம் குறைவடைந்தது. இவை அனைத் தினையும் விட எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதம் காணப்பட்ட காலத்தினையும் விட கூடுதலான காலம் நில விய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நான் மரபு வழி உரிமையாகப் பெற்றுக்கொண்டேன். அரசிறைக் கான எந்தவித வழிவகையும் காணப்படவில்லை. பயங்கரவாதத்திலிருந்து இந்த அரசின் இறைமையினை பாதுகாப்பதற்குக்கூட தேவையான நிதி கிடைக்குமளவு இருக்கவில்லை. புதிய சுதந்திரக் கொள்கைகள் ஆழ வேரூன்றப்பட்டிருந்தன. உள்நாட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட தீர்வுகள், உள்நாட்டுத் திறன்கள் மற்றும் ஆற்றல்கள் என்பன தரம் குறைவானதாகக் கருதப்பட்டன. அரச உடைமைகளின் விற்பனை, தேவையற்ற மூலதனசெலவினம், வறியவர்களுக்கான உதவிகள், வருமானம் தரும் வரிகளுக்கான மன்னிப்புக்களை வழங்குதல் என்பன கிரமமான நீண்டகால கொள்கைவழக்காறுகளாகக் காணப்பட்டன. இதன் விளைவாக நாடு தெளிவான பாதையை நோக்கிச் செல்ல முடியாதிருந்தது.

**மீள் குடியேற்றம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் கூட விடுவிக்கப்பட்ட திகதிகளிலிருந்து நாம் அடைந்துகொண்ட முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். அரசாங்கம் 263,000 பேரைமீள் குடியேற்றுவதற்கு இயலுமாக இருந்தது. 15,000 பேர் மாத்திரமே இன்னும் மீள் குடியேற்றப்படவுள்ளனர். பெருமளவிலான விவசாய நிலங்கள், பொது இடங்கள், குடியேற்றப்பிரதேசங்கள் என்பவற்றில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. மின்சாரம், நீர்வழங்கல் வசதிகள், பாதைகள் மற்றும் பாலங்கள் நிர்மாணம், பாடசாலைகளை புதுப்பித்தல், சுகாதார வசதிகள் மற்றும் பிற பொது இடங்களுக்கான ஏற்பாடு என்பன வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை வழமையான நிலைக்கு மாற்றியமைத்துள்ளது. இந்த முன்னெடுப்புக்களின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்ட பொருளாதாரத் தொடர்பு எமது பல்லின மற்றும் பல்வகைக் கலாசார சமூகத்தின் உள்ளங்களையும் எண்ணங்களையும் இணைப்பதனையும் இலக்காகக் கொண்டுள்ளது. வடக்கில் 2 பில்லியயன் ஐ.அ.டொலர் மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை அரசாங்கம் செயற்படுத்தியுள்ளது. இதன் பிரதான மீள் கட்டமைப்பு செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டளவில்நிறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு**

கௌரவ சபாநாயகர் அவர்களே, அத்தகைய சமாதானம் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகளை மேற்கொண்ட எமது அரசாங்க ஊழியர்கள் மற்றும் இராணுவ வீரர்களுக்கு உரிய நன்மதிப்பினை நாம் வழங்குதல் வேண்டும். அரசாங்கத்துறையானது மிக முக்கியமான பங்களிப்பொன்றினை வழங்குவதாக நான் நம்புகிறேன். நாம் அனைவரும் அறிந்தது போன்று, அரசாங்கத்துறையானது ஓரங்கட்டப்பட்ட ஒருகாலம் இருந்தது. கடந்த 5 வருடங்களின் போது எமது அரசாங்கம் இந்த நிலைமையினை மாற்றியமைத்துள்ளது. அரசாங்க ஊழியர்கள் 1.3 மில்லியனாக அதிகரித்துள்ளனர். அனைத்து வகுதிகளையும் சேர்ந்த ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களது துயரங்களில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டுமுள்ளன. அவர்களுக்கு வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன் வீடமைப்பு மற்றும் பிறகடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டுள்ளன. 2006ல் அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பங்களிப்பு மருத்துவத் திட்டமொன்றினை நான் அறிமுகப்படுத்தினேன். இக் காப்புறுதி நன்மைகளை ஓய்வூதியம் பெறுநர்களும் விரிவாக்குவதற்கு நான்முன்மொழிகின்றேன்.எனவேதேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தேசிய மற்றும் மாவட்ட வைத்திய சாலைகளில் அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கென பிரத்தியேகமாகத் தெரிவுசெய்யப்பட்ட வாட்டுக்களைத் தரமுயர்த்துவதற்கும் பராமரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். இத் திட்டத்தின் கீழ் எத்தகைய வைத்தியசாலைகள் மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கான செலவினங்களை அறவிட்டுக்கொள்ளமுடியும். பிரதான வைத்தியசாலைகளில் அத்தகைய வசதிகளை தரமுயர்த்துவதற்கும் பராமரிப்பதற்குமான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு ரூபாய் ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். இவ் முன்மொழிவின் மூலம் ஏறக்குறைய 450 ஆயிரம் ஓய்வூதியம் பெறுநர்களும் 1.3 மில்லியன் அரசாங்க ஊழியர்களும் குறிப்பிடத்தக்களவு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நான் எதிர்பார்க்கிறேன்.

**பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு**

கௌரவ சபாநாயகர் அவர்களே, எனது வரவு செவுத்திட்டத்திற்கு முன்னரான கலந்தாலோசனைகளின் போது அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்துவதற்கு முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப மட்டங்களில் மேலதிக தொழில்கள் உருவாக்கப்படுவது அவசியம் என்பதை உணர்ந்துகொண்டேன். எனவே பொறியியல், நிர்வாகம், திட்டமிடல், ஆசிரியர் சேவை, தொழில்நுட்ப சேவைகள், விவசாய விரிவாக்கல் மற்றும் பிற திறன்களைக் கொண்ட துறைகளில் நாடளாவிய சேவைகள் அனைத்துக்கும் 10 ஆயிரம் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். இளம் பதவியினரை அறிமுகப்படுத்தும் வகையில் அரசாங்க வங்கிகள் மற்றும் பிற நிதியியல் நிறுவனங்களில் முகாமைத்துவ பயிலுனர்களாக மேலும் ஆயிரத்து 500 பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர். பாதுகாப்பு அமைச்சு அதன் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு ஆயிரத்து 500 தாதிமார் தேவை என்பதை எனது கவனத்திற்கு கொண்டுவந்தது. இதற்கான ஆட்சேர்ப்புக்களும் பட்டதாரிகள் மற்றும் வேலைவாய்ப்பினை நாடும் பிற தகைமை பெற்ற இளைஞர்களுக்கிடையிலிருந்து மேற்கொள்ளப்படும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் தொடர்பான விடங்களில் நான் கூடிய கவனம் செலுத்தியுள்ளேன். சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களுக்காக மாதமொன்றிற்கு 100 ரூபாய் அதிகரிப்பொன்றினை வழங்குவதற்கு வருடம் தோறும் ரூபாய் 1.9 பில்லியன் செலவாகும். அந்த வகையில் சம்பள அதிகரிப்புக்கள் என்பது இலகுவான விடயமல்ல. எவ்வாறாயினும் அரசாங்க ஊழியர்கள் அபிவிருத்தி முன்னுரிமையுடன் சமரசம் செய்யாது சில நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவர்களாவர். தமது அன்றாடப் பொறுப்புக்களையும் மேற்கொண்ட அதேவேளை சுனாமி மற்றும் பயங்கரவதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களை அவர்கள் முகாமைசெய்த முன் மாதிரிமிக்க செயற்பாட்டினை நாம் மறக்கமுடியாது. அரசாங்க ஊழியர்கள் கடுமையாக உழைப்பதற்கும் மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் நாம் தூண்டுதல் அவசியமாகும். அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக அவர்களது கரிசனைகளை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அவை தீர்த்துவைக்கப்படுதலும் வேண்டும். பெரும்பாலான அரசாங்க ஊழியர்கள் தற்பொழுது காணப்படும் சம்பள முரண்பாடுகள் காரணமாக சம்பளப் படியேற்றங்களை இழந்துள்ளனர். சில மாகாண சபை ஆசிரியர்கள் முன்னைய முரண்பாட்டுத்திட்டங்களை எதிர்பார்த்தவர்களாக தொடர்ந்தும் கொடுப்பனவுகளைப் பெற்றுவருகின்றனர். ஆசிரியர்களின் முழுமையான சம்பள முரண்பாடுகளை புதிய சேவைப்பிரமாணக் குறிப்பினூடாக திருத்தப்படுதல் வேண்டும்.

இப்பின்னணியில் அரசாங்க ஊழியர்கள் மற்றும் இராணுவப் படை வீரர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு ஒன்றாக 5 சதவீத சம்பள அதிகரிப்பொன்றினை வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன். அரசாங்க சேவை சம்பளங்களில் 1:4 என்ற தற்போது காணப்படும் கட்டமைப்பினை பேணக்கூடியதாக இருக்கும். அரசாங்க ஊழியர்கள் மற்றும் இராணுவப் படைவீரர்களில் பதவிநிலையல்லாத வகுதியினர் அனைவருக்கும் 2011 ஜனவரி மாதத்திலிருந்து வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை மாதமென்றிற்கு 600 ரூபாவினால் அதிகரிப்பதற்கும் நன் முன்மொழிகின்றேன். இக்கொடுப்பனவை பதவிநிலை வகுதியினருக்கு 2011 யூலை மாதத்திலிருந்து அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகிறேன். அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை அல்லாத ஊழியர்கள் அனைவரினதும் தற்பொழுது காணப்படும் சம்பள முரண்பாடுகளை திருத்துவதற்கு சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகளை 2011 யூலை மாதத்திலிருந்து அமுலுக்குவரும் வகையில் செயற்படுத்துவதற்கு முன்மொழிகிறேன். 2011 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு ஏற்புடையதான சம்பளத்திட்டத்தினை ஏற்படுத்துவதற்கு நான் மேலும் முன்மொழிகிறேன். மாகாண மட்டத்திலுள்ள ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை வழங்குவதற்கும் முன்மொழிகிறேன். இந்தத்திருத்தங்கள் அனைத்தும் அரசாங்க ஊழியர்களினதும் சம்பளங்களை மாதமென்றுக்கு 1, 200 இலிருந்து ரூபாய் 3,140 என்ற வகையில் அதிகரிக்கச் செய்யும்.

**ஓய்வூதியம்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களுக்காகவும் அவர்களது வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினை மாதம் ஒன்றிற்கு ரூபாய் 250இனால் 2011 ஜனவரியிலிருந்து அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். ஓய்வூதியக் கட்டமைப்பில் காணப்படும் முரண்பாடுகளை திருத்தும் வகையில் 2003க்கு முன்னர் இளைப்பாறியவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 750 ரூபாவும் 2003க்கும் 2006க்கும் இடையில் இளைப்பாறியவர்களுக்கு 250 ரூபாவும் அதிகரிப்பாக வழங்குவதற்கு முன்மொழிகின்றேன். 2001 யூலை மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் சம்பளங்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்புக்கான எனது முன்மொழிவுகள் ஏறக்குறைய 4 இலட்சத்து 50 ஆயிரம் ஓய்வூதியம் பெறுநர்களுக்கு 1.3 மில்லியன் அரசாங்க ஊழியர்களுக்கும் நன்மையளிக்கும்.

அரசாங்க ஊழியர்களின் உயர் தொழில் புரியும் வகுதியினர் அவர்களது நிலையான முன்னேற்றத்தர நிர்னயங்களுக்காக ஊக்குவிப்பு வழங்கப்படவேண்டிய தேவைஉள்ளது. எமது பல்கலைக்கழகங்களினதும் ஆராட்சி நிறுவனங்களிவலும் கல்வி சார் மற்றும் ஆராய்ச்சி அலுவலர்கள், மருத்துவ, பொறியியல், சட்ட மற்றும் பிரத்தியேக முகாமைத்துவ வகுதியினர் தெளிவாக, வித்தியாசமன பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றனர். அந்த வகையில் அவர்களது சேவைகளுக்கு மதிப்பு வழங்க வேண்டியுள்ளது. எனவே பல்கலைக்கழக கல்வி சார் பதவியினர், மருத்துவ உயர் தொழில் புரிநர்கள் மற்றும் பிற குறிப்பீடு செய்யப்பட்ட உயர் தொழில் புரிநர்கள் அவர்களது விசேட சூழ்நிலைகளுக்கேற்ப பிரத்தியேக உயர் தொழில் கொடுப்பனவாக அவர்களது சம்பளத்தில் 25 சதவீதத்தினை அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன். அரசாங்கம் மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகளில் பணியாற்றும் உயர் தொழில் மற்றும் முகாமைத்துவப் பகுதியைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்காக மோட்டார் வாகன சலுகைத் தீர்வையினை விரிவாக்குவதற்கும் நான் முன் மொழிகின்றேன். எனது முன்மொழிவுகளுக்கான தொடர்புடைய தொழிநுட்ப குறிப்புக்களை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். கடன்பெறுகை வரையறைகளைச் சேர்ப்பதற்கு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான திருத்தமும் வரைபு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக் கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளும் குழு நிலை விவாதம் ஆரம்பமாவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# சைவபரிபாலன சபையால் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 131 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ்.சைவ பரிபாலன சபையினால் கடந்த 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியோரின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசளிப்பு நாவலர் குருபூசை தினமான எதிர் வரும் 28ஆம் திகதி நடைபெறும் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாக பரீட்சை செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**பேச்சுப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

ம.மோகனதாரணி (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), சி.சிவனுஜா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), நா.கேசவராஜ் (கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**மத்திய பிரிவு**

சு.விஜிதா (யா/ மகாஜனாக் கல்லூரி), ப.பிரதீஸ் (யா/யாழ்.இந்துக் கல்லூரி), கி. கோபிதா (யா/ அருணோதயாக் கல்லூரி)

**மேற்பிரிவு**

உ.அருள்பரன் (ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை), க. சாயிராம் (யா/மத்திய கல்லூரி), த.வராகினி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**

து.வசீகரன் (யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), கு. கஜேந்திரன் (யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), கி. அருள்ஜோதி (யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்). (ஸ்ரீ)

# சகலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சகலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது இதயத்தில் அரசியல் தீர்வுத் திட்டமொன்று இருப்பதாகவும் அந்த யோசனை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதா என ஆராய வேண்டும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகளினால் மட்டும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைக் காது சகல மக்களினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அரசியல் தீர்வுத் திட்டம் அமையவேண்டுமென அவர் வலியுறுத் தியுள்ளார்.

இவ் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப் பது குறித்து ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் ஆண்டில் வட மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது தவணையில் பயங்கர வாதத்தை இல்லாதொழித்தமை மிகப் பெரிய சாதனையாகக் கருதுவதாகவும் மக்களின் இதயங்களை வென்றெடுப்பதே மிகவும் முக்கியமானதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

ஒரு இன சமூகமோ ஒரு பிரதேசமோ அன்றி நாட்டின் அனைத்துத் தரப்பினரும் நன்மை அடையக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் தோற்கடிக் கப்படவில்லை எனவும் பயங்கரவாதிகளே தோற்கடிக்கப்பட்டதாகவும் இதனை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என அவர். வலியுறுத் தியுள்ளார்.

இனங்களுக்கு இடையிலான இடை வெளியை அதிகரிப்பதற்கு சர்வதேச சமூகம் முயற்சிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்

நாட்டில் அபிவிருத்திப் பணிகள் முன் னெடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் காத்திரமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வான்களுக்கு விசேட அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வானுக்காக விசேட அனுமதிப்பத்திரமொன்றை அறிமுகப் படுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

பாடசாலை வானுக்குள் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் 3 வயதுச் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பாடசாலை வான்களில் சிறுவர்கள் இவ்வாறு துஷ்பிரயோகப்படுத்தப்படுவது தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் செல்வரத்தினம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்வரத்தினம் நேற்று முன்தினம் (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் (ரத்தினம் கராஜ், ஆலடிச்சந்தி, மானிப்பாய்) பாசமிகு மனைவியும் திலகராணி, செல்வராஜா (கனடா), சண்முகராஜா (ஜேர்மனி), தருமராஜா, சித்திவிநாயகி, பாலாம்பிகை (றஞ்சிதா கிளினிக், உடுவில்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் விமலநாதன், சிறீஸ்காந்தன் (றஞ்சிதா கிளினிக், சுதுமலை), றஞ்சிதமலர், கனகாம்பிகை, சத்தியபாமா, ருக்மணி ஆகியோரின் பாசமிகு மாமியும் ராஜீ, ரஜன், துர்க்கா, கோகிலா, தர்சி, தர்சிகா, ரஞ்சிதன், றமணன், றஷாத் ஆகியோரின் அம்மம்மாவும் நந்தா, கவிதா, விஜிதா, தெல்லோ, சுதா, வினுஷா, அனுஷா, நந்தினி, சசி, ராஜன், ராஜி, ரகு, ராகுலன் ஆகியோரின் அப்பம்மாவுமாவார்.

அன்னாரிக் இறுதிக்கிரியைகள் இன்று(23.11.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

றஞ்சிதா வைத்தியசாலை,
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.
தொ.பே.021 222 6174
0779975225, 0779031514

தகவல் :
பாலாம்பிகை(மகள்)

(3107)

## சின்னையா சிவராஜா

(படவரைஞன் - DRAUGHTSMAN)

கட்டுவன், மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவராஜா நேற்றுமுன்தினம் (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சிப் பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும் தர்மபூபதியின் (ஆச்சியக்கா) அன்புக்கணவரும் காலஞ்சென்ற சியாமளாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்துப் பிள்ளை, தங்கம்மா, வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்) , நாகலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (22.11.2010) திங்கட்கிழமை காலை 8.30 மணியள்வில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.30 மணியளவில் இளங்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோவிலடி,
கோப்பாய் றோட்,
உரும்பிராய் தெற்கு.
தொடர்பு:- 0771144279
021 222 6942

தகவல்:
மனைவி-தர்மபூபதி
(ஆச்சி அக்கா)

(சி-1069)

# உதுல் பிரேமரட்ணவின் பிணை மனு விசாரணை

தனக்குப் பிணை வழங்குமாறு கோரி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உதுல் பிரேமரட்ண தாக்கல் செய்த மனு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட து.


அதன்போது எதிர்வரும் 26ஆம் திகதிக்கு இவ் விசாரணையை ஒத்தி வைத்த நீதிபதி தீபாலி விஜேசுந்தர, அன்றைய தினம் இது தொடர்பாக பதிலளிக்குமாறு கறுவாத்தோட்ட பொலிஸாருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் அறிவித்தல் அனுப்புவதற்கு உத்தரவிட்டார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சொத்துக்களுக்கு சேதமேற்படுத்திய குற்றச்சாட்டில் உதுல் பிரேமரட்ண கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ஜனாதிபதி இரண்டாவது தடவையாகப் பதவியேற்றதன் பின் நேற்றைய தினம் யாழ்.வலயக் கல்வி திணைக்களத்தில் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தேசியக் கொடியேற்றுவதையும் ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு தொடர்பாக, வர்த்தக ஆசிரிய ஆலோசகர் உரைநிகழ்த்துவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)





நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையால் வாசிப்பு மாத பரிசளிப்பும் வள்ளுவர் சிலை திறப்பு விழாவும் அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் சாந்தசீலன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிப்பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன் அருகில் நிற்பதையும் கொடிகாமம் பொலிஸ்பொறுப்பதிகாரி ஜெகத்பண்டார உரையாற்றுவதையும் மேற்படி நூலகத்தில் நிறுவப்பட்டவள்ளுவர் சிலையை இலவசமாக வடிவமைத்துத் தந்த துரைசிங்கம் குமரநாதன் வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

# நாட்டில் நல்லாட்சி மலர்வதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்

## யாழ். மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நல்லாட்சி மலரவும் அபிவிருத்திகள் முன்னெடுத்துச் செல்லப்படவும் நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்தை முன்னிட்டு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த 30 வருட காலமாக நடைபெற்ற யுத்தம் தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்.

இதில் முகாமைத்துவம், இலத்திரனியல் போன்ற பெறுபேறுகளில் யாழ்.மாவட்டம் முன்னிலையில் திகழ்ந்து வருகிறது.

இவை தவிர யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்களிப்பு உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது.மக்களின் தேவைகளை நிறைவேற்றவே அரசாங்கம் உள்ளது என்பதை மக்கள் அறிந்து கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-6)

# அமெரிக்க அரசினால் கண்ணிவெடி அகற்றும் கருவிகள் அன்பளிப்பு

(கொழும்பு)

கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளில் பயன்படுத்திக்கொள்வதற்கான கருவிகளை அமெரிக்க அரசாங்கம் இலங் கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. இலங்கைக்கான பிரதி அமெரிக்காத் தூதர் அதனை ஒப்படைத்துள்ளார்.

அமெரிக்கா் அன்பளிப்புச் செய்துள்ள கருவிகளில் கண்ணிவெடி அகற்றும் கருவிகள் மட்டுமன்றி அதற்கான வாகனங்களும் கூட உள்ளடங்கியுள்ளது.

அவற்றின் மொத்தப் பெறுமதி ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் சார்ஜ் பவுலர் குறித்த உபகரணத்தொகுதியினை இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவிடம் வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது.

(ஸ்ரீ-2)

# கண்டி மல்வத்து பீடாதிபதிக்கு ஜனாதிபதி கார் அன்பளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்க தேரருக்கு புதிய மோட்டார் கார் ஒன்றை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ம்ஹிந்த ராஜபக்ஷ இதற்கு முன்னர் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தி ரகித்த தேரருக்கும் மோட்டார் கார் ஒன்றை பரிசாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் மல்வத்து பீடாதிபதிக்கு வாகனமொன்றை ஜனாதிபதி வழங்க முற்பட்ட போது மல்வத்து பீடாதிபதி அதனை நிராகரித்ததுடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மக்கள் விரோத செயல்களுக்கு மல்வத்து பீடாதிபதி அதிருப்தி வெளியிட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக சரத் பொன்சேகா கைது விவகாரம் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை மல்வத்து பீடாதிபதி வெளியிட்டிருந்தார்.

அத்துடன் கடந்த பெப்ரவரி மாதம் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக பாரியளவு சங்க சம்மேளனமொன்றை நடாத்தும் முயற்சிகளில் மல்வத்து பீடாதிபதி முக்கிய பங்காற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# புகைப்பிடித்தலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

## உலக நாடுகளிடம் ஐ.நா.கோரிக்கை

(கொழும்பு)

புகைப்பிடித்தலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புகைப்பிடித்தலுக்கு எதிரான சர்வதேச மாநாடு உருகுவே நாட்டில் இடம்பெற்றது.

இம்மாநாட்டில் புகையிலை உற்பத்திகளை கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள 170 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

புகையிலை உற்பத்தி பயன்பாட்டினால் பெருமளவானவர்கள் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தற்போதைய உலக சனத் தொகையில் 50 பில்லியனுக்கும் அதிகமானவர்கள் புகைப்பிடித்தல் காரணமாக உருவாகும் நோய்களினால் உயிரிழக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவித்துள்ளது.

தற்போது எயிட்ஸ், போதைப் பொருட்கள், தற்கொலைகள், வீதி விபத்துக்கள், கொலைகள் ஆகியவற்றை விட புகைப்பிடித்தல் காரணமாக அதிகளவானோர் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. புகையிலை உற்பத்திகளை வரையறுப்பதற்கு உலக நாடுகள் முனைப்பு காட்ட வேண்டுமென மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)



சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலகத்தில் பிரதேச சபை செயலாளர் தலைமையில் மரம் நடுகை நிகழ்வு அண் மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்ட கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மரம் நடுகை செய்வதைப் படத்தில் காணலாம்.


வாழ்த்துகின்றோம்



கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராய் பதவியேற்ற **உயர்திரு வே.பாலசுப்பிரமணியம்** அவர்களை வாயார, மனதார வாழ்த்தி வரவேற்கின்றோம்.

(சி-1658)

யா/சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.

# புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட 20 ஆயிரம் பொறிவெடிகள் மீட்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு உடையார்கட்டு குருவில் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட 20 ஆயிரம் பொறி வெடிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இந்த வெடிகளை மீட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களிடம் நடத்தப் பட்ட விசாரணைகளின் போது கிடைத்த தகவலை அடுத்தே இவை மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதில் 20 ஆயிரம் பொறி வெடிகள், 12 கிலோ எடைகொண்ட 4 கிளைமோர் குண்டுகள், 100 பீரங்கி குண்டுகள் உள்ளிட்ட பல வெடி பொருட்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பின் வாங்கிச் சென்ற புலிகள் இவற்றை புதைத்திருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட குண்டுகள் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இந்திய வர்த்தக அமைச்சர் விரைவில் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த சர்மா அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் விஜயத்தின் போது இரு நாடுகளுக் கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள சீபா உடன்படிக்கை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப் பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யூன் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது பிரதமர் மன்மோகன் சிங்குடன் சீபா ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை உச்சளவு உறுதிப்படுத்துவதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் இந்திய வர்த்தக அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி அசீப் அல் சர்தாரி ஆகியோர் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். (ஸ்ரீ-2)

# மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படாததால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கு போதியளவு அதிகாரங்கள் கிடையாது என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் அளவிற்கு மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

காணி அதிகாரம் உள்ளிட்ட அதிகாரங்கள் வழங்கப்படாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் திருகோணமலை மாவட்டத்தில் 400 காணிகள் தனியார் துறையினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் இது ஓர் பாரிய பிரச்சினை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பாரியளவு காணிகள் வழங்கப்பட்டால் அதன் மூலம் பிரதேச மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்று நிருப அறிவிப்புக்களை விடுப்பதற்கு முன்னரும் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னரும் அமைச்சுக்களிடமிருந்து அனுமதி கோர வேண்டுமென்ற அரசாங்கத் தின் தீர்மானம் தொடர்பில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள முதலமைச்சர்கள் மாநாட்டில் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# இடம்பெயர்ந்தோருக்கான பணிகள் சில வாரங்களில் முடிவடையும்

## ஐ.சி.ஆர்.சி.அறிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் தமது செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்வது தொடர்பாக ஆராயுமாறு இலங்கை அரசாங்கம் தம்மைக் கேட்டுக்கொண்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சினூடாக தமக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த அறிவுறுத்தல் குறித்து ஆராய்ந்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஈவ் ஜெவனோனி தெரிவித்துள்ளார்.

இதற்கான நேரம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்று கூறிய அவர் தமது ஆளணி வளங்களின் நிலைமைகள் குறித்தும் தாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடக்கே இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான பணிகள் தமது நிகழ்ச்சி நிரலின் படி சில வாரங்களுக்கு இடம்பெறும் எனவும் அதன் பின்னரான நிலைமைகள் குறித்து அதிகாரிகளுடன் ஆராய வேண்டியுள்ளதாகவும் ஈவ் குறிப்பிட்டார்.

தமது பணிகளில் சில இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உட்பட தமது கூட்டு தொண்டு நிறுவனங்களிடமும் அமைச்சுகளிடமும் ஒப்படைக்கப்படக்கூடும் என அவர் மேலும் தெரி வித்தார்.


போருக்குப் பின்னரான காலகட்டத்தில் மற்ற நாடுகளைப் போல இடைக்கால நடவடிக்கைகளையே தாங்கள் இலங்கையிலும் மேற்கொண்டுவந்ததாகவும் அப்படியான ஒரு நடவடிக்கை இயல்பானதே என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடு மூன்று வித அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளது-ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மூன்று விதமான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சரத்பொன்சேகா ஆகியோர் இந்த அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஐக்கிய தேசியக்கட்சியின் இளைஞர் முன்னணியினால் பதுளையில் நடத்தப் பட்ட சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நோக்கியா கையடக்கத் தொலைபேசி உற்பத்தி நிறுவனம் பாரிய உற்பத்திசாலையொன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநில முதலமைச்சரான கருணாநிதியினால் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை தமிழகத்திற்கு கொடுக்க முடியுமென்றால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஏன் அவ்வாறான திட்டங்களை அமுல்படுத்த முடியாது என அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் தொலைபேசி உற்பத்தி சாலைகளில் பணியாற்ற விருப்பமா என இளைஞர் யுவதிகளிடம் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே இவ்வாறான அபிவிருத்திகளை நாடு அடைய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இனப்பிரச்சினையின் மூலவேரைக் கண்டறிந்து அதற்கான பரிகாரத்தைக் காணவேண்டும்

## தேசிய சமாதானப்பேரவை ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளைப் போல் அல்லாது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆயுத அல்லது பிராந்திய சவால்களை இரண்டாவது பதவிக்கால ஆட்சியில் எதிர்கொள்ளமாட்டார். அவரது கீர்த்தி மற்றும் அதிகாரம் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்தி நாட்டை புதிய பாதையில் இட்டுச் செல்ல வழி வகுக்கும்.

சமாதானத்தை கட்டியெழுப்பவும் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வதற்கும் பிரதான சவலாக இலங்கை எதிர்கொள்வது யுத்தத்தின் பின்னரான இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதாகும் என ஜனாதிபதியின் இரண்டாம் தவணை பதவி ஏற்பு தொடர்பில் தேசிய சமாதான பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சமா தானப் பேரவை மேலும் தெரிவிக்கையில்,

சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற அனைத்து சமூகத்தினருமே யுத்தத்தால் பாதிக்கப்பட்டனர். பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தார்கள். அவர்கள் பட்ட நஷ்டத்திற்கு ஈடுசெய்வதோடு மீள் புனர்வாழ்வுக்கு வழி காண்பதும் தேவையானதொன்றாகும்.

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவியேற்பு வைபவம் தேசிய ரீதியில் கொண்டாடப்பட்டாலும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அது வடக்கு மற்றும் கிழக்கு சமூகத்தவர்கள் பங்கு கொள்ளாததுதான்.

மூன்று தசாப்த கால யுத்தத்தால் வேதனையுற்ற அந்த சமூகத்தவர்களுக்கு சமாதானக் கனியை பகிர்ந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். நல்லிணக்கத்தை உண்மையில் போஷிக்கும் நாடு என்றால் அதனைச் செய்வது அவசியமாகும்.

அரசாங்கத்தைச் சேர்ந்த அநேக உறுப்பினர்கள் அரசாங்கம் சார்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உரையாற்றுகிறார்கள்.

ஆயுத ரீதியாக யுத்த களத்தில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து நாட்டின் முக்கிய பிரதான பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அபிவிருத்திக்கான கதவு திறக்கப்படவுள்ளதாகவும் கூறுகிறார்கள்.

ஆனால் அபிவிருத்தியும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் சிறுபான்மை சமூகத்தின் கோரிக்கைகளை மறைத்து விடாது அவர்களது தேவை நிறைவேற்றப்படாதவரை தீர்வுக்கான தேவை இருந்து கொண்டே யிருக்கும். அபிலாஷைகள் நிறைவேற்றப்படாத காரணத்தாலேயே தெற்கில் தீவிரவாதமும் வடக்கு மற்றும் கிழக்கில் பயங்கரவாதமும் தலையெடுத்தன.

இனப்பிரச்சினையின் மூலவேரைக் கண்டறிந்து அதற்கான பரிகாரத்தைக் காணுமாறு தேசிய சமாதானப் பேரவை ஜனாதிபதியைக் கோருகிறது.

புலிகளைத் தோற்கடித்து விட்டோம். இனக் கோரிக்கைகள் மறைத்து விட்டன. என்பதற்குப் பதில் அதற்கான தீர்வு ஒன்றைக் காண வேண்டும்.

18ஆவது அரசியல் திருத்ததின் படி பூரண அதிகாரம் கொண்டுள்ள ஜனாதிபதி அதிகாரத்தையும் பதவி நிலைகளையும் தேடுவோரை விடுத்து உண்மை, நேர்மை என்பவற்றை மதிப்பவர்களை நீதி நிர்வாகத்தில் நியமனம் செய்யவேண்டும். இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் விஞ்ஞானப் போட்டி 2010-2011

விஞ்ஞான அறிவினை மக்களிடையே, மாணவர்களிடையே பரப்புதல் எனும் குறிக்கோளுடன் பல்வேறு நிகழ்ச்சிகளை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பல மட்டங்களில் நடத்தி வருகின்றது. அந்த வகையில் பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சி பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி நடாத்தப்படுவதில் முதன்மையாகின்றது.

கடந்த காலங்களைப் போன்று ஆனால் யாழ்ப்பாண வன்னிப் பிரதேசங்களிலுள்ள 1AB,1C பாடசாலைகளுக்கிடையில் யாழ்ப்பாண, வன்னி பிரதேசங்களுக்கு தனித்தனியாக இப் போட்டி நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன.

இவ் வருடத்திற்கான போட்டி நிகழ்வுகள் மேற்படி பாடசாலைகளின் அதிபர்களினது கருத்துக்களை செவிமடுத்து அதன்பிரகாரம் நடாத்தப்படவுள்ளது. இப்போட்டி நிகழ்வுகளுக்கூடாக மாணவர்களினது மென் திறன்களை (Soft Skills) மேம்படுத்த யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்திற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு அகமகிழ்கின்றோம்.

1. வினா விடைப் போட்டி
2. கட்டுரைப் போட்டி
3. பேச்சுப் போட்டி
4. கண்காட்சிப் போட்டி
5. சுவரொட்டிப் போட்டி
6. சித்திரப் போட்டி
7. விபரணப் படம் தயாரித்தல் போட்டி
8. பாடசாலைத் தோட்டப் போட்டி

இப்போட்டிகளுக்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1.விஞ்ஞான வினா விடைப்போட்டி**

இப்போட்டியானது இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதல் கட்டமாக பொது அறிவு எழுத்துப் பரீட்சையும், இரண்டாம் கட்டமாக வாய்மூல வினாவிடைப்போட்டியும் நடைபெறும்.

யாழ்ப்பாண, வன்னி பிரதேசங்களிலுள்ள 1AB,1C பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு தனித்தனியாகப் போட்டிகள் நடைபெறும். இப்போட்டியில் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்கள் கலந்துகொள்ளலாம். ஒரு பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 5 மாணவர்கள் முதலில் எழுத்துமூலமான பொது அறிவுப் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பங்குபற்றிய 5 போட்டியாளர்கள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் முதல் எட்டுப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு (யாழ்ப்பாண, வன்னிப் பிரதேசங்களுக்கு தனித்தனியாக) வாய்மூல வினாவிடைப் போட்டி நடாத்தப்படும். எழுத்து மூலமான பொது அறிவுப்போட்டி 2011 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி நடைபெறும். பரீட்சை நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

வாய்மூலமான இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் வினாவிடைப்போட்டியில் கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் முதலாம் இரண்டாம் நிலைமைகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். இவைதவிர எழுத்து மூலமான பொது அறிவுப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 10 மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் எழுத்து மூலமான பொதுஅறிவுப் போட்டியில் வெற்றி பெற்றமைக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**2.விஞ்ஞான கட்டுரைப் போட்டி**

ஒவ்வொரு பாடசாலையிலும் க.பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் ஒவ்வொரு ஐம்பது மாணவர்களுக்கு இரண்டு மாணவர்கள் என்ற விகிதத்தில் மாணவர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம். எனினும் எந்த வொரு பாடசாலைகளிலிருந்தும் ஆகக் குறைந்ததாக இரண்டு மாணவர்கள் பங்குபற்ற அனுமதியளிக்கப்படுவர்.

கட்டுரைப் போட்டிக்கு உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளிலிருந்து மொத்தமாக ஆறு (06) தலைப்புக்கள் வழங்கப்படும். அதில் ஒரு தலைப்பிலான கட்டுரையை ஒரு மணி நேரத்தினுள் எழுதி முடிக்க வேண்டும். இப்போட்டியில் தெரிவு செய்யப்படும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா முதல் மூன்று மாணவர்களுக்கு சான்றிதழ் கள் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகள் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

**3. விஞ்ஞானப் பேச்சுப் போட்டி**

இப் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து இரு மாணவர்கள் (உயிரியல்/ பௌதீக விஞ்ஞானப் பிரிவிலிருந்து ஒருவரும், கலை/ வர்த்தகப் பிரிவிலிருந்து ஒருவரும்) மட்டுமே பங்குபற்றலாம்.முதல் சுற்றில் புோட்டியாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு போட்டியாளருக்கும் 30 நிமிடங்களுக்கு முன்னதாக ஆறு தலைப்புக்கள் முறையே உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகியவற்றில் தலா இரு தலைப்புக்கள் வீதம் வழங்கப்படும். அத்தலைப்புக்களுள் ஒன்றினைப் பற்றி ஐந்து நிமிடங்கள் பேசுதல் வேண்டும். முதல் சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் அதே தினத்தில் நடைபெறும் இறுதிச் சுற்றுக்கு தகுதிபெறுவர். இறுதிச் சுற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**4.விபரணப் படமாக்கல் போட்டி**

இப்போட்டியில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களில் ஆகக்கூடியது ஐந்து மாணவர்களைக் கொண்ட ஒரு குழு மட்டுமே பங்குபற்றலாம். இப் போட்டியில் உயிரியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு துறை சார்ந்த ஒரு முக்கிய விடயத்தை அல்லது ஒரு பிரச்சினையை இனங்கண்டு ஆகக் கூடியது 10 நிமிடங்களுக்குள் காட்சிப் படுத்தக்கூடியதாக விபரணப் படம் அமைய வேண்டும்.இவ்விபரணப் படமாக்கல் செயற்பாடானது குறைந்த செலவில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*குறிப்பு:- விபரணப் படத்தின் தரத்தினை விட அதில் அடங்கியுள்ள அம்சங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.*

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர் குழுக்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**5.விஞ்ஞானக் கண்காட்சி போட்டி**

இப்போட்டி இரு பிரிவுகளாக நடாத்தப்படும்..யாழ்ப்பாண,வன்னி பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கென தனித்தனியாக யாழ்ப்பாணத்திலும் வன்னி பிரதேசத்திலும் நடைபெறும்.இப்' ாடசாலைகளிலுள்ள க.பொ.த உயர்தரத்தி ் கல்வி கற்றும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

கண்காட்சிப் போட்டி நிகழும் அதே தினத்தில் அதேயிடத்தில் சுவ ரொட்டி (Paster Contest) போட்டி மற்றும் சித்திரப் போட்டி (Drawing Contest) ஆகியனவும் நடைபெறும்.

கண்காட்சிப் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து எத்தனை குழுக்களும் பங்குபற்றலாம். ஒருகுழுவில் ஆகக் கூடியது மூன்று மாணவர்கள் மட்டும் அக் குழுவின் காட்சிப் படுத்தலுக்கு உரிமை கோரமுடியும். இரு பிரிவுப் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

காட்சிப்படுத்தலுக்கான ஆக்கங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட விதிகளுக்கமைவாக இருத்தல்வேண்டும்.

1. விஞ்ஞானஞ் சார்ந்த புத்தகமாக (Innovative) இருத்தல் வேண்டும்.

2.நின்று நிலைக்கக் கூடிய தொழில்நுட்ப புத்தாக்கமும் அபிவிருத்தி (Sustainable Technological Innovation and Development) என்ற கருப்பொருளுக்கு வலுச் சேர்ப்பதாக அமையவேண்டும்.

3.சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சக்தி வள மேம்பாடு மற்றும் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சி என்பன கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

4. சுவரொட்டியும், சித்திரமும் போட்டிகளுக்காக சாதாரண Bristol Board ஒன்றின் பரிமாணத்தில் தயாரிக்கப்பட வேண்டும்.

5.இயலுமானவரை குறைந்த செலவில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

6. இலகுவில் இடம் மாற்றக்கூடிய (காவிச் செல்லக்கூடியதாக) இருத்தல்வேண்டும். இக் காட்சிப் பொருட்கள் தொடர்பான எவ்விதமான செலவுகளையும் யாழ்ப்பாண விஞ் ஞான சங்கம் பொறுப்பேற்காது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**6. பாடசாலைத் தோட்டப் போட்டி**

இப்போட்டி பாடசாலைக்கானது. இப் போட்டியை மதிப்பீடு செய்வதில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

1.தோட்டத்தின் விஸ்தீரணம்

2.தோட்டத்திலுள்ள பயிர்கள்/ தாவரங்களின் வகைகள்

3.மூலிகைத் தாவரங்களின் எண்ணிக்கை

4.அவரைப் பயர்கள் மற்றும் கிழங்குப் பயிர்கள்

5. நாளாந்த தேவைக்கு பயன்படும் வகையிலுள்ளவை (இலைக்கறி வகைகள்)

6. பழமரங்களின் எண்ணிக்கை

7.அலங்கார தாவரங்களின் எண்ணிக்கை

8. தாவரங்களுக்கு பெயர்ப்பலகையிருத்தல் (தாவரப் பெயர், குடும்பப் பெயர், பொதுப் பெயர்)

9.சேதன முறையிலான பராமரிப்பு, பூச்சி பீடைக் கட்டுப்பாடு

10. கழிவுகளை மீள்சுழற்சிசெய்தல், கூட்டுரம் தயாரித்தல்

11.பொதிப் பயிர்ச்செய்கை

12. பீடைகளின் தாக்கமும் அவற்றின் அளவும்

13. பயிர்ச்செய்கை முறைகள், சிறப்பான பயிர்ச்செய்கைகள் ,ஊடு பயிர்ச்செய்கை

14. மாணவர்களின் பங்களிப்பு

பெப்ரவரிமாதம் 2011 இல் இப் போட்டி மதிப்பீடு செய்யப்படும்.பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலையை முன்கூட்டியே பதிவுசெய்தல் வேண்டும் சிறந்த பாடசாலை தோட்டத்திற்கான பரிசில்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மேற்படி விஞ்ஞானப் போட்டிகளில் 1AB,1C பாடசாலைகளில் கல்வி கற்கும் மாண வர்கள் பங்குபற்றலாம்.ஆகையால் இப் போட்டிகள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டவாறு மாணவர்கள் பங்கெடுப்பதில் பாடசாலைகள் ஊக்கமளிக்கவேண்டும் என யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றது.

**கலாநிதி கு.மிகுந்தன்**

தேர்வு தலைவர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

## வடக்கு -கிழக்கில் அதிகாரப் பகிர்வு யோசனை அமுல்படுத்தப்பட வேண்டும்

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பகிரப்படவேண்டும் என்பதே தமது கோரிக்கை என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அதிகாரப் பகிர்வு யோசனை அமுல் படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகள் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்காக அரசியல் தீர்வுத் திட்ட யோசனையைத் தயாரித்து வருவதாகவும் உத்தேச அரசியல் தீர்வுத்திட்டம் விரைவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஈ.பி.டி.பி உள்ளிட்ட பத்து அரசியல் கட்சிகள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து இன்றைய தினம் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு விசேட சந்திப்பொன்றை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## செஞ்சிலுவை சங்க அலுவலகங்களை மூடுமாறு அரசு உத்தரவிடவில்லை

### லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவிப்பு


சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்களை மூடுமாறு அரசாங்கம் உத்தரவிடவில்லை என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய கிளைகளை மூடிவிடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள கருத்திற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தை மூடிவிடுமாறு அரசாங்கம் உத்தரவிடவில்லை எனவும் யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வடக்கில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரசன்னம் அவசியமானதா என்பதனை ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வாறான முயற்சிகளை அரசாங்கம் தடுத்து நிறுத்தி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# எலும்பில் ஏற்படும் புற்றுநோய்




புற்றுநோய்களை ஆரம்பக் கட்டடத்திலேயே கண்டுபிடித்துவிட்டால் குணப்படுத்த முடியும். என்பது ஆறுதலான விடயம்.ஆரோக்கியமான வாழ்க்கை முறை, சத்தான உணவு,மன அமைதி போன்றவற்றைக் கூடுமானவரை கடைப்பிடித்தால் புற்றுநோய் வராமல் பெரும்பாலும் பார்த்துக் கொள்ள முடியும்.

இனி எலும்பில் ஏற்படும் புற்றுநோய் குறித்து விரிவான அலசல்

**எலும்புப் புற்றுநோய் என்றால் என்ன?**

எலும்பில் உருவாகி மற்ற இடங்களுக்குப் பரவும் புற்றுநோய் முதல் நிலை எலும்புப் புற்றுநோய் (Primary Bone Cancer) என்று "அழைக்கப்படுகிறது. உடலின் வேறு பாகத்தில் புற்றுநோய் உருவாகி அது எலும்புக்கும் பரவும். இதை இரண்டாம் நிலை எலும்புப் புற்றுநோய் என்கிறோம்.

**பொதுவாக எந்த எந்த உறுப்புகளில் முதல் நிலை எலும்புப் புற்றுநோய் வரும்?**

கால் முட்டி, கை மணிக்கட்டு, தோள் பட்டை போன்ற இடங்களில் முதல் நிலை எலும்புப் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

**எலும்பிலேயே உருவாகும் புற்றுநோயின் அறிகுறிகள் என்ன?**

புற்றுநோய் அறிகுறிகள் அது எந்த இடத்தில் இருக்கிறது என்பதைப் பொறுத்து நோயாளிக்கு நோயாளி மாறுபடும். இருப்பினும் பொதுவாக புற்றுநோய் ஏற்பட்ட பகுதியில் வீக்கம், வலி, அப் பகுதியை இயல்பாக அசைக்கமுடியாத நிலை, உடல் பலவீனம், சிலருக்கு எலும்பு முறிவுபோன்ற அறிகுறிகள் இருந்தால் கண்டிப்பாக டாக்டரிடம் சென்று ஆலோசிப்பது நல்லது.

சாதாரணமாகவும் மூட்டு வலி வரலாம். ஆனால் மாத்திரைகள் எடுத்தும் வலி குறையவில்லை என்றால் புற்றுநோயாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவது அவசியம். ஏனெனில் ஆரம்ப நிலையிலேயே புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் நிலையில் சிகிச்சை நல்ல பலனைத் தரும்.

**எந்த வயதினருக்கு எலும்புப் புற்றுநோய் வர வாய்ப்புள்ளது?**

எந்த வயதிலும் வரலாம். என்றாலும் 10 முதல் 30 வயதுள்ளோருக்கு முதல் நிலை எலும்புப் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம். இளம் வயதில் மூட்டுவலி வந்தால், அலட்சியமாக இருக்கக்கூடாது.

**எலும்புப் புற்றுநோய்களில் எத்தனை வகைகள் உள்ளன?**

எலும்புப் புற்றுநோயில் இரண்டு வகைகள் உள்ளன. பரவும் தன்மை கொண்டது. மற்றொன்று பரவாத தன்மை கொண்டது. பரவும் தன்மைப் புற்றுநோயை "Malignant Cancer" என்கிறோம். பரவாத புற்றுநோயை "Benign Cancer" என்கிறோம். பரவாத புற்றுநோயால் அதிக அளவு ஆபத்தில்லை. சிகிச்சைக்கு நல்ல பலன் உண்டு.

ஆனால் பரவும் தன்மை கொண்ட புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்தாலும் ஆபத்துண்டு.

**எலும்புப் புற்றுநோயை உறுதிப்படுத்தும்" பரிசோதனைகள் என்ன?**

கிளினிக்கல் பரிசோதனையிலேயே 60சதவீதம் உறுதிப்படுத்திவிடலாம்.

இருப்பினும் எக்ஸ்ரே அதைத் தொடர்ந்து "போன் ஸ்கான் (Bone Scan)" "சி.டி. ஸ்கான் ", "எம்.ஆர்.ஐ.ஸ்கான்(MRI scan)"ஆகியவற்றின் மூலம் மிகத் துல்லியமாகப் புற்றுநோய் பரவியுள்ள அளவைக் கண்டறிய முடியம்.ஸ்கான் மூலம் உறுதிப்படுத்தினாலம் திசுப் பரிசோதனை (பயாப்ஸி) செய்து 100 சதவீதம் உறுதியாகச் சொல்ல முடியும்.

**எலும்புப் புற்றுநோய்க்குச் சிகிச்சை என்ன?**

புற்றுநோயின் தன்மை,அது எந்த இடத்தில் உள்ளது என்பதைப் பொறுத்து சிகிச்சை அமையும்.மூன்று வகை சிகிச்சைகள் உள்ளன.ஹீமோதெரபி (Chemotherapy) மருந்து கொடுப்பது, ரேடியோதெரபி (Radio therapy) கதிரியக்கச் சிகிச்சை மூலம் புற்று செல்க்ளை அழிப்பது ஆகியவை முதல் கட்ட சிகிச்கைள். மூன்றாவதாக அறுவைச் கிக்சிசை.அறுவைச் சிகிக்சைமூலம் புற்றுநோய் பரவியுள்ள இடத்தை முற்றிலுமாக அகற்றிவிடுவது.

**எலும்புப் புற்றுநோயில் அறுவைச் சிகிச்சையின் பங்கு என்ன?**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட எலும்பை அகற்றிவிட்டு செயற்கை எலும்பு பொருத்த வேண்டியது அவசியம். இல்லையெனில் நோயாளி இயல்பாக நடமாடிமுடியாமல் அல்லது செயற்பட முடியாமல் ஊனமாகி விடும் சூழ்நிலை ஏற்படும்.பாதிக்கப்பட்ட எலும்புப் பகுதியை அகற்றிவிட்டு செயற்கை உறுப்பு அல்லது போன் சிமெண்ட் அல்லது இறந்தவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட எலும்பைப் பொருத்திச் சரி செய்யலாம்.

இதுபோன்ற மாற்று எலும்பு பொருத்துவதால் புற்றுநோயை முழுமையாகக் குணப்படுத்தி விட முடியாது: நோயால் துன்பப் படாமல் தரமான வாழ்க்கை (Quality life) வாழ வழி செய்யலாம்.

**செயற்கை உறுப்புகளைப் பொருத்து வதற்கு செலவு அதிகம் ஆகுமா?**

டைட்டானியம் அலாய் மற்றும் ஸ்டெயின் லஸ் ஸ்டீல்போன்ற உலோகங்கள் மூலம் செயற்கை எலும்புகள் செய்யப்படுகின் றன. இதை வெளிநாடுகளில் இருந்து வரவழைத்தால் விலை அதிகம். வெளிநாடுகளிலிருந்து வாங்கி அறு வைச் சிகிச்சை செய்யும் நிலையில் இலங்கை ரூபாயில் 10 இலட்சம் வரை செலவாகும்.

இதைக் கருத்தில் கொண்டு உள்நாட்டிலேயே இந்த செயற்கை எலும்பைத் தயாரிக்கவேண்டும் என்று விரும்பினேன்.அதற்காகப் பல ஆண்டுகளாக ஆய்வு செய்து பொறியியலாளர்களுடன் இணைந்து இந்தியாவிலேயே செயற்கை எலும்பு (Custom Mega Prostesis) தயார் செய்தோம். இந்த முறையில் இதுவரை 970 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் செய்யப்படும் செயற்கை எலும்புகளின் விலை இந்திய ரூபாயில் 35ஆயிரத்திலிருந்து ரூ.40 ஆயிரம் வரை தான்.இதனால் நடுத்தர, ஏழை மக்க ளும் பலன் அடையமுடியும்.

**செயற்கை எலும்புக்குப் பதிலாக இறந்தவர்களின் எலும்பை எடுத்து எலும்புப் புற்றுநோயாளிகளுக்குப் பொருத்தமுடியுமா?**

தாராளமாகப் பொருத்த முடியும். இலங்கையில் எலும்பைத் தானம் கொடுக்க முன்கூட்டியே விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளனர்.

டாக்டர் மயில்வாகனன் நடராஜன்
சென்னை

**எலும்பு வங்கி என்றால் என்ன?**

இறந்தவர்களிடமிருந்து ஆறு மணி நேரத்துக்குள் எலும்பை எடுத்து அதை மைனஸ் 18 டிகிரி சென்ரிகிரேட்டில் (Deep Preezer) வைக்கவேண்டும். இவ்வாறு செய்தால் இரண்டு ஆண்டுகள் வரை அந்த எலு ம்பை மற்றவர்களுக்குப் பயன்படுத்தலாம்.ஏற்கனவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், எய்ட்ஸ் நோயாளிகள், ஹெபடைடீஸ் பி.சி.மஞ்சள் காமாலையால் பாதிக்கப் பட்டவர்களின் எலும்பை எடுக்கக் கூடாது.




# இரத்தக் கொதிப்புக்கு முக்கிய காரணம்!



நாம் கோபப்படும்போது நமது உடலில் திடீரென உயரும் அதிக பட்ச இரத்த அழுத்தமே இரத்தக் கொதிப்பு எனப்படும்.ஒருவர் கோபப்படும் போது மூளைக்கு அதிகளவில் இரத்தம் தேவைப் படுகிறது. அப்போது இதயத்திலிருந்து தலைக்கு அதிகபட்சமாக இரத்தம் கடத்தப் படுகிறது.இதனால் தான் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது.

இரண்டு வகையான இரத்த அழுத்தம் உள்ளது. அவற்றில் ஒன்று இறுக்க (சிஸ்டோலிக்) அழுத்தம். இது 100 இல் இருந்து 120 மில்லிமீற்றர் பாதரச அளவில் காணப்படும்.

மற்றொன்று தளர் (டயஸ்டோலிக்) அழுத்தம்.இது 70 இல் இருந்து 80 மில்லி மீற்றர் பாதரச அளவில் இருக்கும்.

இரத்த அழுத்தமானது 140/90 மில்லி மீற்றர் பாதரச அளவிற்கு மேல் இருந்தால் அவருக்கு உயர் இரத்த அழுத்தம் அல்லது இரத்தக் கொதிப்பு இருப்பதாகக் கொள்ளலாம்.இந்த அளவுகளை அளக்கும் கருவி இரத்த அழுத்தமானி.

மருத்துவர்கள் இரத்த அழுத்த மானியின் கைப்பட்டையைக் கையில்கட்டி, காற்றழுத்தத்தினை மெர்க்குரி அழுத்தமானியில் மெதுவாக உயர்த்துவர். முழங்கை மூட்டிற்கு முன்பகுதியில் ஸ்தெஸ்கோப்பை பொருத்தி, மெர்க்குரிமானியிலிருந்து காற்றை வெளியேற்றி அழுத்தத்தைக் குறைத்து வரும் போது, முதலில் எந்தக் கட்டத்தில், அதாவது எந்த மெர்க்குரி அகவில், தமனி நாளத்துடிப்பின் ஒலி கேட்க ஆரம்பிக்கிறதோ, அதுவே இறுக்க அழுத்தமான " சிஸ்டோலிக் அழுத்தம்" ஆகும்.

இந்தத் தொடர் ஒலியானது வலுவிழந்து, எந்த மெர்க்குரி அளவில், முழுவதும் கேட்காமல் போகிறதோ, அந்த அளவில் கணிக்கப்படும் அளவு, தளர் அழுத்தமான, "டயஸ்டோலிக் அழுத்தம்" ஆகும்.

இரத்த இழுத்தம் உயர்வதால் தான் இரத்த கொதிப்பு வருகிறது. இது எந்த வயதினருக்கும் வரலாம். வயதானவர்களுக்கு தான் வரும் என்று தவறாக நினைக்கக் கூடாது. குறிப்பாக,'வயது முதிர்ந்துவிட்டால், இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பது இயல்பானது தான். அதனால் பாதிப்பில்லை' என்றும் சொல்லிவிட முடியாது.





தேவைக்கு அதிகமாக உணவு சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக கொழுப்புச் சத்து மற்றும் உப்புச்சத்துக்கள் நிறைந்த உணவை சாப்பிடவே கூடாது. உணவில் அதிகளவு உப்பைச் சேர்ப்பதால், இரத்த நாளங்கள் முறுக்கேறச் செய்து இரத்த அழுத்தம் உயர்கிறது.

உடலுழைப்பு இல்லாதவர்களிடமும் மன உளைச்சலோடு வாழ்கின்ற சூழலில் இருப்ப வர்களும் இரத்த கொதிப்புடன் காணப் படுவர்.

இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகமாக உள்ளவர்களுக்கும் , நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் உயர் இரத்த அழுத்தம் உண்டாகிறது. நீரிழிவு நோயினால் கொலஸ்ரோல், ட்ரைகிளிசரைட் போன்ற கொழுப்புப் பொருட்கள் இரத்தத் தில் அதிகளவு இருப்பதால் இரத்தக் கொதிப்பிற்கும் நீரிழிவு நோய்க்கும் தொடர்பு உள்ளது.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக , அன்பு நெறியில் அமைதியான வாழ்க்கை நடத்துபவர்களுக்கு பெரும்பாலும் உயர் இரத்த அழுத்தம் வருவதே இல்லை!

# பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 8







## இன்று பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 85 ஆவது அவதார தினம்




அகில உலகிலுமுள்ள ஏறக்குறைய 175 நாடுகளில் வாழ்ந்து வரும் கோடிக் கணக்கான சாயி பக்தர்கள் இன்றைய 85 ஆவது சாயி திரு அவதார தினத்தை ஆனந்தமாக கொண்டாடுகிறார்கள். இந்த "ஆனந்தம்" எவ்வண்ணம் எம்முள் இருந்து ஊற்றெடுக் கிறது என்பதை பகவான் காட்டிய சுதந்திரமான வழிமுறை ஒழுங்கில் நாம் ஒவ்வொருவரும் எப்படி அனுபவமாக்கிக் கொள்ளலாம் என்பதை அவருடைய கருணை நிறைந்த அருளுரைகளினோடு உட்பு குந்து பார்ப்போம்.

''நான்'' ஒவ்வொருவரிடமும் சென்று ஒவ்வொரு மனிதனிடமும் தூங்கிக் கிடக்கும் தெய்வீகஉணர்வைத் தட்டிஎழுப்பி அவனைத் தெய்வீகமாக்குவதற்கு முழுமையான தெய்வீகசக்தி ''சத்தியசாயி''யாக மனித சமூகத்திற்கு நடுவே வந்திருக்கிறது.



நீ தூங்காமல் இருப்பதாலோ அதிகம் தூங்கி இருப்பதாலோ நீ குறை கூறி னாலோ சண்டையிட்டாலோ, உதைத்தாலோ, அழுதாலோ அப்பொழுதும் நான் உன்னைக் கைவிடமாட்டேன். உன்னைச் சுமந்து செல் லவும், உன்கூட வரவும் உனக்கு உதவி செய்யவும் வந்திருக்கிறேன். உன்னை என் னால் கைவிட முடியாது. என்குழந்தை களுக்கு செய்ய வேண்டிய கடமையில் தவறமாட்டேன். என்னுடைய பணிக்கு உதவி செய்யும் ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றி யுடன் இருப்பேன் என்கிறார் பகவான் பாபா.



இப்படியும் ஒரு அன்பை இப்படியொரு துணையை இப்படியொரு தயாளரை, இப்படியொரு தாய்மையை உலகம் என் றாவது கண்டதுண்டா? நல்லவர், தீயவர் என்று கூட பாகுபடுத்தாமல் எல்லோரையும் மீட்க வந்து அதாவது பிரபஞ்சம் என்னும் சேற்றில் அமிழ்ந்து விட்ட நம்மை மீட்கத் திருக்கரங்களை நீட்டுகிறதே! திக்கற்றுத் தவிக்கும் மக்களுக்குக் கற்பக விருட்ஷம் போல வந்து நம் முன் நிற்கிறதே!

இந்த சாயி எதை நமக்குத் தர இருக்கிறது?

ஆம்! மேலும் அவர் கூறுகிறார்.... என்னிடமுள்ள ஐஸ்வரியம் எவரிடமும் இல்லை. அது என்னவெனில் நிலையான, தூய்மையான மாசு மறுவற்ற "பிரேமை" (தூய அன்பு) ஒன்றே இதுவே சாயியின் பெருமதிப்புள்ள நிதி. இதுமட்டுமிருந்தால் "பிரபஞ்சமே நமக்கு அடிபணியும்" என்கிறார் சாயிபகவான்.

மேலும் அவர் எம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்! ஆம் அவர் தரும் செய்தி! என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டிய மகா மந்திரங்கள் மூன்று அவை:

1. கடவுளின் மேல் மாறாத அன்பு வைத்திரு.

2. பூாவத்திற்கு அதாவது பாவம் செய்வதற்கு அஞ்சு.

3. சமூகத்தில் நல் ஒழுக்கத்தைக் கடைப்பிடி.

எவர் இந்த கட்டளைகளின் பிரகாரம் ஒழுகுகிறாரோ அவரையே உண்மையான மனிதர் என்று அழைக்க முடியும். இதுவே தான் ஒருவரின் வாழ்க்கையின் குறிக் கோளாக இருக்க வேண்டும்.

மனிதன் இடைவிடாது இன்பத்தைத் தேடுகிறான். இன்பம் அனுபவிப்பதற்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக் கிறான். ஆனால் உண்மையான இன்பம் எங்கே கிடைக்கிறது. இன்பம் மனிதனி டத்தே அவனுள் இயல்பாக உள்ளது. இந்த உண்மையை உணராமல் அறியாமை யினால் அவன் புறப்பொருள்களில் அதைத்தேடுகிறான். புறப்பொருள்களை பிறரை நம்பி வாழ்ந்தால் அது துன்பத்தை யே தரும். ஆனால் "தன்னிடத்தில் தனது ஆத்மாவில் நம்பிக்கை வைத்திருத்தல்" என்றும் உண்மையான இன்பத்தை நல்கும். புறப்பொருள்களில் தன் வாழ்க் கையை அமைத்துக் கொள்ளும் வரை அவன் தன்னுடைய வாழ்க்கையில் நிலையான இன்பத்தைச் சுவைக்கமாட் டான். புறப்பொருள்களில் இன்பத்தைத் தேடுவது எப்படிப்பட்டதாக இருக்குமென் றால், தாகத்தைத் தணிக்க கானல் நீரை நோக்கி ஓடுவது போலாகும் என்பதை என்று அவன் உணர்கிறானோ, அன்றே அவன் தன் மனதை உள்முகமாகத் திருப்பி தன்னுள் நிறைந்திருக்கும் ஆனந் தத்தை அனுபவிப்பான்.

உங்களுடைய எல்லா செயல்களின் பலனையும் இறைவனுக்கு அர்ப்பணியுங் கள். நித்திய தத்துவமான அந்த ஆத்மாவே நீங்கள் ஒவ்வொருவரும் முடிவில்லாத ஆனந்தத்தின் ஸ்வரூபம் உங்களிடத் தேயே இயல்பாகவுள்ளது. சத்தியமே அந்த வித்து. நல்லொழுக்கமே அந்த வேர். அன்பே அந்த நீர். சாந்தியே அந்த மலர். ஆனந்தமே அந்தப் பழம். அன்பு ததும்புபவனாகவும் சாந்தியுள்ளவனா கவும் நாங்கள் இருக்க வேண்டும்.

**ஜெய் சாய்ராம்**






**க.மகேஸ்வரன்,**
**சாயி இல்லம்,**
**தாவடி.**



✷ நீ இறைவனின் பக்கம் திரும்பவில்லை என்றால்
இறைவனின்பால் உன் எண்ணங்கள் திரும்பும் பே
குறையத் தொடங்கும். உன்னுடைய துன்பத்துக்கு
காரணம். எனவே நல்ல செயல்களைச் செய்து இ
பலன்களை அனுபவிப்பாயாக!

✷ வானத்தில் ஒரே ஒரு சூரியன்
ஆறுகள், குளங்கள், பாத்திர
ஒன்றேதான். எங்கெல்லாம் நீ
தட்டில் நீரை ஊற்றி வையுங்க
காணலாம். அப்படியென்
சூரியனின் பிரதிபலிப்பே.
புத்தி, சித்தம், அகம்
போன்றவை. ஆ

# 85 ஆவது அவதார தினம் - 23.11.2010

## முழு உலகையும் காத்தருளும் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

இன்று எல்லாம் வல்ல ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 85 ஆவது ஜனனதினமாகும். இந்த மண்ணையும் மக்களையும் பூரணப்படுத்தும் பரிபூரணனாக, உலக நிரந்தர தத்துவமாக, கருணையே வடிவ மாக, 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி இப்பூவுலகிற்கு அவதாரம் செய்தார்.

பகவான் பாபா வைகுண்டத்தில் இருந்து பூமிக்கு அவ்தாரம் செய்த மகா விஷ்ணு வின் மறு அவதாரத்திருவடிவம். பகவான் பூலோக வைகுண்டமெனும் புட்ட பர்த்தியில் எழுந்தருளி உலகம் உய்யவும் சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு என்னும் நான்கு குணங்களில் மூழ்கவும் அருள் பாலிக்கின்றார். அவரது தெய்வீக காந்தப் புலம் காராணைக்கடலில் நீர் அள்ளுவது போல் உலக மக்களை தன்பால் அள்ளி எடுப்பது மாத்திரமல்ல, மனிதன் என் பவன் யார்? அவன் வாழ்வு நிலை எவ்வா றானது? அவன் எந்த நிலைக்கு உயரக் கூடியவன்? என்பதை எல்லாம் புரிய வைத்து மனித வாழ்வில் எண்ணற்ற அற்புதங்களை அள்ளி வீசுகின்றார்.

பகவான்பாபாவுக்கு தாய் தந்தையர் இட்ட பெயர் சத்தியநாராயணன். இருந்தும் 14ஆவது வயதினில் அதாவது 1940 ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி தான் சாய் பாபா என்றும் நான் இனி உங்களைச் சார்ந்தவன் அல்ல என்றும், எனது அடியார்கள் என்னை அழைக்கிறார்கள் என்றும், உரத்த தொனியில் தனது குடும் பத்தவருக்கு அறிவித்துவிட்டு வீட்டைவிட்டு வெளி யேறினார்.



இந்த உலகம் இறைவனை ஏற்றுக் கொண்டபோதும் இறைமுறையை ஏற்கத் தயாரில்லை. காரணம் ஆசை, பொறாமை, எரிச்சல் என்பன மனித வாழ்வில் தேவைகளை அதிகப்படுத்தி வேகம் கொள்ளவைக்கின்றன. அன்றாடக் கடமைகளில் இறைவணக்கம் பற்றற்ற ஒன்றாகி மனிதவாழ்வு ஓடிக்கொண்டே இருக்கிறது. மதபோதனைகள் ஊதியத் திற்கான தொழிலாயிற்று. வஞ்சகம், சூது, வாது, கொலை, கொள்ளை பல்கிப் பெருகி விட்டது. மெலியாரை வலியார் வருத்தும் படலம் முடிவற்ற துன்பமாகி விட்டது. நீதி மறைந்து தர்மம் செத்துவிட்டது. இதுவே இறைவனின் உள்ளத்தை உலகின்பால் ஈர்க்கவைத்து இறைவனே மனித உடல் தாங்கி மனித இனத்தை நல்வழிப் படுத்தும் நோக்கோடு எல்லாம் வல்ல சத்தியசாயி பாபா அவதரித்துள்ளார். பகவானை நேரில்காணும் பாக்கியம் பெற்றவர்கள் தமது உள்ளத்தில் அமைதி எனும் பெரும் பேற்றை பெற்றவர்கள் ஆவர். அவர்முகம் ஒளி பொருந்தியது. பகவானைப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் வடிக்காதவர் எவருமிலர்.

புட்டபர்த்தியில் இப்பொழுது ஆயிரக் கணக்கான யோகியரும் ஞானியரும் நிறைந்து விட்டனர். இவர்களில் மேலைத் தேயர்கள் அதிகம் எனலாம். இவர்கள் பொருளற்ற, கதியற்றவர்களும் அல்ல. பெரும் விஞ்ஞானிகள், பெரும்பதவி வகித்தவர்கள், கோடீஸ்வரர்கள் ஆவர்கள். பகவானின் தெய்வீகத்தைக் கண்டு அதனைத் தொடர்ந்து அனுபவிப் பதற்காக பாபாவின் பிரசாந்தி நிலையமே தமக்கு எல்லாம் என்று தவம் செய்கின்றனர். நீ எந்த அளவுக்கு என்னை ஆராய முடியுமோ? அதற்கு மேலாக ஆராய்ந்து என்னிடம் வந்து சேர். உனக்கு அடைக் கலம் நான் தருகின்றேன் என அருளு கின்றார் பாபா. பிரசாந்தி நிலையம், சர்வமத ஆலயம் எல்லாம் வல்ல சத்திய சாயிபாபா சர்வமதபிரியன், காலத்தைக் கடந்தவர், விதியை மாற்றுபவர், அலை களுக்கு மூலகாரணம் சமுத்திரம் போல அருள், அற்புதம், கருணை என்பவற்றிற்கு மூலகாரணம் சாயிநாதன். புட்டபர்த்தியில் இருந்து முழு உலகையும் காத்தருளும் பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபா தன் அன் பாலும் அருளாலும் அற்புதங்களாலும் அடியார்களை தன்னருகே அழைத்து ஒவ்வொரு இதயங் களையும் தூய வனா க்கி அன்பால் நிரப்பி ஆட்கொள் கின்றார்.

என்னை உன்னுடைய சாரதி ஆக்கிக் கொள் என்று நம்மிடம் கூறுகிறார். பாபா இந்த ஒப்புயர்வற்ற நல்ல வாய்ப்பினை நழுவ விடாதே. உனக்கு மீழ்ச்சி அளிக்கக் கூடிய சாதகம் எதுவென்று என்னிடம் கேள். காலம் கடந்தால் என்னை நெருங்க உன்னால் முடியாது போய்விடும். உலகின் நாற்றிசைகளில் இருந்தும் வெள்ளப் பெருக்கைப் போன்று மக்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். அதற்காகவே இந்த உருவத்தை ஏற்று வந்திருக்கின்றேன். இந்த அவதாரத்திற்கு தயக்கமோ, தடங்கலோ இல்லை. என்பெயர் - சத்தியம். என்போதனைகள் சத்தியம். என்பாதை சத்தியம். நானே சத்தியம். என்கிறார் பாபா. அண்ட சரா சரங்களை தன்னகத்தே ஆட்படுத்தி எம்மை எல்லாம் நல்வழிப் படுத்தும் பரந்தாமன் சாயிநாதனுக்கு வெள்ளக்கமல இதயத்தால் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிப்போமாக.

ஜெய் சாய்ராம்.

யாதவன்


இறைவன் உன்பக்கம் திரும்பமாட்டார்.
...ாது உலகியல் சம்பந்தமான உன் ஆசைகள்
...ம் மகிழ்ச்சிக்கும் நீயும் உன் செயல்களுமே
...றைவனின் அன்புக்கு பாத்திரமாகி நல்ல

...தான் உள்ளது. ஆனால் அதன் பிரதிவிம்பங்களை பல
...ங்கள் முதலியவற்றில் உள்ள நீரில் காணலாம். சூரியன்
... இருக்கிறதோ அங்கெல்லாம் அது பிரதிபலிக்கிறது. ஒரு
...ள் அந்த நீரில் கூட சூரியன் பிரதிபலிப்பதை நீங்கள்
...தால் சூரியன் அந்த நீரில் உள்ளதா? இல்லை அது
... அதே விதமாக ஆத்மா என்பது ஒன்றுதான். மனம்,
...ாவம் எல்லாம் வித்தியாசமான பாத்திரங்கள்
...வே தெய்வீகம் ஒன்றுதான்.

பகவான் சத்திய சாயிபாபா

# கார்த்திகை மாத இராசிபலன்கள்

## 17.11.2010 முதல் 15.12.2010 வரை




(மகம்,பூரம், உத்தரம் முதலாம் பாதம்)

**அனுசரித்து சென்றால் ஆதாயம்!**

***புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் சிங்க இராசி நேயர்களே!***

தகராறுகளை தீர்த்து வைப்பதில் நீங்கள் கெட்டிக்காரர்கள். தக்க சமயத்தில் நீங்கள் மற்றவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள். இகழ்வதையும், புகழ்வதையும் சமமாகப் பாவிப்பவர்கள் நீங்கள்தான். எதையும் ஆணையிட்டுச் சொல்வீர்கள். மற்றவர்களுக்கு மத்தியில் வித்தியாசமாக நீங்கள் செயல்படுவதால் உற்றார், உறவினர்கள் கூட உங்களுடன் பேசப் பயப்படுவர்.

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சூரியன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அத்துடன் தனாதிபதியும், சுகாதிபதியும் கூடி உலா வருவதால் மிகுந்த நன்மைகளை உங்களுக்கு வழங்கும். என்றாலும், குருப்பெயர்ச்சிக்கு பிறகு ஆரோக்கியத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டியது அவசியமாகும்.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குரு பார்வை பலத்தால் நன்மைகளைக் கொடுத்தாலும், இருக்கும் இடத்தைப் பொறுத்து இல்லத்தில் சில தொல்லைகளைக் கொடுக்கலாம். உள்ளத்தில் அதை நினைத்து கவலைப்பட வைக்கலாம். எனவே, குரு வழிபாட்டையும், சுயஜாதகத்தில் தெசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாட்டையும் தேர்ந்தெடுத்து மேற் கொண்டால், வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு**

இந்த முறை குரு முன்னும், பின்னுமாக வக்ரகதியில் சென்று கொண்டிருந்தார். மாதத் தொடக்கத்தில் கும்பத்தில் சஞ்சரித்த குரு, நவம்பர் 21 ஆம் திகதி முதல் மீனத்தில் நிலையாகச் சஞ்சரிக்கப் போகிறார்.

அஷ்டமத்தில் சஞ்சரித்து நிற்கும் குரு அளவுக்கு மீறிய செலவுகளைக் கொடுப்பார். வரவுக்கு மீறி செலவு உருவாகும் என்று வர்ணிப்பார்.

ஆனால், அதன் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால், பணம் வராமல் செலவாகாது. பணம் வந்து சேரும் பொழுது, செலவும் வந்து சேரும். எனவே, வாழ்க்கைத் தேவைகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. மேலும், அதன் பார்வை நான்காம் இடத்திலும், பன்னிரெண்டாம் இடத்திலும் பதிவதால், தாயின் உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்படும். தாய்வழி உறவினர்களின் ஒத்துழைப்போடு தடைகளை அகற்றிக் கொள்வீர்கள்.

பயணங்கள் அதிகரிக்கும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள். பக்கத்தில் இருப்பவர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிகாட்டுவர். பதவிகளும் புதிய பொறுப்புகளும் வந்து சேரும். தூரதேசத்தில் இருந்து வரும் தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சியை வழங்கும். கார், வாகனங்கள் வாங்குவதற்கான எண்ணம் கைகூடும்.

**தனுசு செவ்வாயின் ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 4,9க்கு அதிபதியான செவ்வாய் நவம்பர் 28 ஆம் திகதி 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். கோதண்ட ராகுவோடு கூடும் செவ்வாய், வேதனைகளைத் தீர்த்து வெற்றிப் படிக்கட்டின் விளிம் பில் ஏற வைக்கப் போகிறது. செவ்வாய் உங்கள் இராசிக்கு யோக காரகன் என்பதால் தெளிவான மன நிலையோடு செயல்பட்டு செல்வ வளத் தைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள்.

இம்மாதம் முருகப் பெருமான் வழிபாடு, உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும், ஆறுபடை வீடுகளில் அருகில் உள்ள படை வீட்டிற்குச் சென்று வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்.**

இம்மாதம் குடும்பத்தில் அமைதி கூடும். குல தெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்றிக் கொள்வீர்கள்.

இழந்தவைகளை திரும்ப பெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். உங்கள் இதயம் நினைத்த கனவுகளை கணவர் செய்ய முன்வருவர். வேலைப்பளு கூடும். மாதக் கடைசியில் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வரவேண்டிய பாக்கிகள் வசூலாகலாம். வடக்குப் பார்த்த அம்பிகை வழிபாடு வளர்ச்சியைக் கொடுக்கும்.




(உத்தரம் 2,3,4ஆம் பாதங்கள்,அத்தம்,சித்திரை 1,2ஆம் பாதங்கள்)

**குருபார்வையால் குழப்பங்கள் நிவர்த்தியாகும்!**

***எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் கன்னி இராசி நேயர்களே!***

உங்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தவர்கள் வெற்றி பெறுவார்கள். நீங்கள் உடனடியாக எதற்கும் தீர்வு காணாமல் , யோசித்து செயற்படுவதால் தான் வெற்றி உங்களுக்குகிடைக்கிறது. உங்கள் பேச்சு அளவோடு இருந்தாலும் பேச வேண்டிய நேரத்தில் நீங்கள் பேசுவதால் அது பிறரை ஈர்க்கும். ஆசைகள் நிறைவேறுவதற்காகவே அன்றாடம் நீங்கள் இறைவழிபாட்டை மேற் கொள்வீர்கள்.

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது,காரிய வெற்றி ஏற்படும் என்றே சொல்ல வேண்டும். காரணம் குருவின் பார்வை பலம் தான். மாத தொடக்கத்தில் குரு 6ஆம் இடத்தில் சஞ் சரித்தாலும் பிற்பாதியில் 7ஆம் இடத்தில் அல்லவா சஞ்சரிக்கப்போகிறார்.

எனவே இயல்பான வாழ்க்கையில் உங்களுக்கு ஏராளமான மாற்றங்கள் வந்து சேரப்போகின்றன.

கடன் சுமைகள் குறையும் வேலைகள் தீரும் கிணற்றில் போட்ட கல்லைப்போல , கிடந்த காரியங்கள் இனி துரிதமாக நடைபெற ஆரம்பிக்கும். தனஸ்தானத்தில் சுக்கிரன் வலுப்பெறுகிறார்.சகாய ஸ்தானத்தில் சூரியன் ,புதன் ,செவ்வாய் சேர்க்கை உள்ளது.அப்புறம் என்ன, பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். மனப்பயம் அகன்று மகிழ்ச்சி கூடும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

இந்த முறை பெயர்ச்சியாகும் குரு உங்கள் இராசியைப் பார்க்கப்போகிறார். ஏழரைச்சனியின் ஆதிக்கம் ஒரு புறம் இருந்தாலும் இந்தக் குருவின் பார்வை உங்கள் வாழ்வில் வரும் எண்ணற்ற பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என்பதால் குருவை வழிபடுவது நல்லது.

**அருள் தரும் குருவின் பார்வை அகிலத்தில் நமக்குச் சேர்ந்தால் பொருள் வளம் பெருகும்.** என்பது பொன்னான முன்னோர் வாக்கு எனவே இதுவரை ஸ்தம்பித்திருந்த தொழில் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். தக்க சமயத்தில் விலகிச் சென்ற பணியாளர்கள் மீண்டும் வந்து இணைவர். உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ளும். உடன் பிறப்புக்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்.

கடன் பிரச்சினைகளில் இருந்து மீண்டும் காரியங்களை துரிதமாக நடத்துவீர்கள். இடம்,பூமியால் இலாபம் கிடைக்கும். இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரும். தடம் மாறிச்சென்ற பிள்ளைகள் கூட தானாகவே உங்களைத் தேடி வரலாம்.

**தனுசு -செவ்வாயின் ஆதிக்கம்!**

விருச்சிக இராசியில் சஞ்சரித்து வந்த செவ்வாய் எதிர்வரும் 28ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 3,8க்கு அதி பதியான செவ்வாய் நான்காமிடத்தில் சஞ் சரிக்கும் பொழுது, வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். பயணங்களில் பக்குவமாக நடந்துகொள்வது நல்லது.பரபரப்பை

**சிவல்புரி சிங்காரம்**

குறைத்துக் கொண்டு நிதானமாகச் செயற்பட்டால் பல காரியங்களில் வெற்றியை அடைய முடியும்.

இதற்கு நந்தீஸ்வரர் வழிபாட்டில் கவனத்தைச் செலுத்தினால், நல்ல சம்பவங்களை தினமும் சந்திக்கலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதத்தில் வரவு அதிகரிக்கும். வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். இதுவரை இருந்த குடும்பப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக குறையும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால், குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்து எதையும் செய்வது நல்லது. பிள்ளைகள் முன்னேற்றத்தில் கூடுதல் அக்கறை காட்டு வது நல்லது. தானாகவே அவர்கள் எந்த முடிவும் எடுத்துவிடாமல் உங்களைக் கேட்டுச் செய்யும் விதத்தில் அன்பாகச் சொல்லி அவர்களை வழிநடத்துவது நல்லது. குலதெய்வ வழிபாடு உங்கள் குடும்பப்பப் பிரச்சினை களை நல்ல முடிவுக்கு வர வைக்கும். (தொடரும்)

***அன்பு வாசகர்களே!***


*உங்கள் வலம்புரியில் கார்த்திகை மாத இராசி பலன்கள் தொடர்ந்து வெளிவருவதால் பிறந்த திகதி பலன்கள் வெளிவராது என்பதை அறியத்தருகிறோம். கார்த்திகை மாத இராசி பலன்கள் நிறைவுற்றதும் பிறந்த திகதி பலன்கள் தொடர்ந்து வெளிவரும்.*





யாழ். கல்வி வலயமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து பாடசாலை மேம்பாட்டுத் திட்டமிடல் தொடர்பாக அதிபர்,பிரதி அதிபர், ஆசிரியர்களுக்கு நடத்திய பயிற்சி நெறி நேற்று முன்தினம் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் செயலமர்வு நடத்துவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் இந்துமாமன்றத்தால் நவராத்திரி விழாவையொட்டி மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட மாலை கட்டுதல், தோரணம் அமைத்தல், கோலம்போடுதல் போன்ற ஆக்கங்களை ஆசிரியர்கள் பார்வையிடுவதையும் இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு அதிபர் கு.விமலன் பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

### தனியார் வகுப்புக்கள் தொடர்பில் புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

தனியார் வகுப்புக்கள் தொடர்பில் புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் இந்த மாற்றங்களுடன் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருமானத்தை இலக்காகக் கொண்டு சில தகுதியற்றவர்கள் தனியார் வகுப்புக்களை நடத்தி வருவீதால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனினும் கல்வி மாணவர்களின் எதிர்காலத்தில் நிர்ணயிக்கின்ற ஓர் விடயம் என்பதனால் மிகவும் நிதானமான முறையில் இந்த விடயம் அணுகப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். தகுதியற்றவர்கள் தனியார் வகுப்புக்களை நடாத்துவதற்கு அனுமதிக் கப் படமாட்டாது எனவும் தனியார் வகுப்புக்கள் தொடர்பில் புதிய விதிகள் அறி முகப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக நியதிகளுக்கு அமைய எந்தவொரு நபரும் தமது விருப்பு வெறுப்பிற்கு ஏற்ற வகையில் தமது அறிவை பகிர்ந்து கொள்ளவும் எந்தவொரு நபரும் தாம் விரும்பிய நபரிடம் பாடங்களை கற்று கொள்ளவும் உரிமை இருப்பதாகவும் இது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சில தசாப்தங்களுக்கு முன்னர் அமைச்சர் பந்துல குணவர்தன நுகேகொடைப் பிரதேசத்தில் பிரபல தனியார் வகுப்பொன்றின் ஆசிரியராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## பர்மா இராணுவத்திற்கு இலங்கையில் பயிற்சி?

இலங்கை இராணுவத்தின் கொத்தலாவல பயிற்சிக் கல்லூரியில் பர்மா இராணுவத்திற்கு பயிற்சிகளை வழங்கவும் பர்மாவுடன் இராணுவ ஒத்துழைப்புகளை ஏற்படுத்தவும் இலங்கை அரசு முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பர்மா சென்ற போது இந்த உடன்பாடுகள் எப்ப்பட்டதாகவும் அதன் பின்னர் கடந்த வருடம் நவம்பர் மாதம் பர்மாவின் இராணுவ ஆட்சித் தலைவர் தான் சுவே இலங்கை வந்த போது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலனாய்வுத் தகவல்களை வழங்குதல் இராணுவ தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ளல் போன்றவை இந்த உடன்பாட்டில் உள்ளடங்கியுள்ளன. இதனிடையே இலங்கை அரசுக்கு அன்பளிப்பாக 50 ஆயிரம் டொலர் களை பர்மா இராணுவ ஆட்சியாளர்கள் வழங்கியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கிளிநொச்சியில் 106 இடங்களில் கண்ணிவெடி அபாயம்!

கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவில் கண்ணிவெடி அபாயப்பிரதேசங்களாக 106 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதில் 40 இடங்களில் கண்ணிவெடி அகற்றப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி 296 இடங்களில் தற்போது கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏனைய இடங்களில் அடுத்த கட்டமாகவே கண்ணிவெடியை அகற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மக்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு அடுத்ததாக மக்களின் பிரதான தொழிலான விவசாயப் பிரதேசங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக கல்விச் சூழல்-பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சி புதுமுறிப்பு வித்தியாலயத்தில் பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மாணவர்கள் அடையாளங் கண்டு ஒரு கண்ணிவெடி அப்புறப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இந்தப் பாடசாலையின் செயற்பாடுகள் சில காலம் நிறுத்தப்பட்டு அந்தப் பகுதி முழுவதும் கண்ணிவெடி மீள் தேடுகை செய்யப்பட்டது. (ஸ்ரீ-2)

2010.11 23

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 800-பாப்பரசர் மூன்றாம் லியோ இழைத்ததாகக் கருதப்படும் குற்றங்களை விசாரணை செய்ய மன்னன் ஷார்லெமான் உரோமாபுரிக்கு வந்து சேர்ந்தான்.
- 1227-போலந்து இளவரசன் முதலாம் லெஸ்செக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1248-காஸ்டிலின் மூன்றாம் பேர்டினண்ட் மன்னனின் படையினர் செவில் நகரைக் கைப்பற்றினார்.
- 1499-இங்கிலாந்தின் அரசாட்சிக்கு உரிமை கோரிய பேர்க்கின் வோர்பெக் லண்டன் கோபுரத்தில் இருந்து தப்பியோட முயல்கையில் கைதாகி தூக்கிலிடப்பட்டான். இவன். 1497 இல் நான்காம் எட்வேர்ட்டின் மகன் என உரிமை கோரி இங்கிலாந்தை முற்றுகையிட்டான்.
- 1867-இரண்டு ஐரியர்களைச் சிறையிலிருந்து வெளியேற உதவியமைக்காக மூன்று ஐரியத் தேசியவாதிகள் இங்கிலாந்து மான்செஸ்டரில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1890-நெதர்லாந்து மன்னன் மூன்றாம் வில்லியம் ஆண் வாரிசு இல்லாமல் இறந்தான். அவனது மகள் இளவரசி வில்ஹெல்மினா அரசியாவாதற்கு ஏதுவாக சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டது.
- 1936-முதலாவது லைஃப் இதழ் வெளியிடப்பட்டது.
- 1940 இரண்டாம் உலகப்போர்:ருமேனியா அச்சுஅணி நாடுகளுடன் இணைந்து.
- 1955-கொக்கோஸ் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு கைமாறியது.
- 1979-மவுண்ட்பேட்டன் பிரபுவைக் கொலை செய்த குற்றத்துக்காக ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தொமஸ் மக்மாகன் என்பவருக்கு டப்ளினிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.
- 1980-தெற்கு இத்தாலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 4ஆயிரத்து 800 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985-எகிப்திய பயணிகள் விமானம் கிரேக்கத்தில் இருந்து புறப்படும் போது கடத்தப்பட்டு மால்ட்டாவில் தலையிறக்கப்பட்ட போது எகிப்தியப் படைகள் விமாணத்தைச் சுற்றி வளைத்தனர்.முடிவில் 60பேர் கொல்லப்பட்டனர்.
- 1990- தமிழீழ விடுதலைப்புலிகள் மாங்குளம் இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்தி அதனை முழுமையாகக் கைப்பற்றினர்.
- 1996-எதியோப்பிய விமானம் கடத்தப்பட்டு எரிபொருள் முடிந்த நிலையில் இந்துமா கடலில் கொமொரோஸ் அருகில் வீழ்ந்ததில் 123 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998-கம்போடியத் தலைவர் வடகூன் சென்னுக்கும் இளவரசர் நொரொடோம் ரனாறிட்டுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 2003-வாரக்கணக்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை அடுத்து ஜோர்ஜிய ஜனாதிபதி எடுவார்ட் ஷெவர்நாட்செ பதவி விலகினார்.
- 2005-லைபீரியாவின் தலைவராக எலென் ஜோன்சன்-சேர்லீஃப் தெரிவு செய்யப்பட்டார். ஆபிரிக்க நாடு ஒன்றின் முதலாவது பெண் தலைவர் இவராவார்.
- 2007-அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 2007-ஆர்ஜென்டீனாவுக்கு தெற்கே பயணிகள் கப்பல் ஒன்று மூழ்கியதில் 154 பேர் கொல்லப்பட்டனர்.


### பிறப்புக்கள்

- 1921 -சுரதா,கவிஞர் (இ.2006)
- 1926-ஸ்ரீசத்திய சாய்பாபா, இந்திய ஆன்மீகவாதி

### இறப்புக்கள்


- 1973-வி.அ.அழகக்கோன், இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.
- 1990-ரூவால் டால்,ஆங்கில எழுத்தாளர் (பி.1916)

**1971-மக்கள் சீன குடியரசின் பிரதிநிதிகள் முதல் தடவையாக ஐக்கிய நாடுகள் அவையில் சீனாவுக்காக பிரதிநிதித்துவப்படுத்தினர்.**



# நேட்டோ நாடுகளுக்கு உதவி அளிப்பதாக ரஷ்யா வாக்குறுதி

## ரஷ்ய-அமெரிக்க பனிப்போர் முடிவுக்கு வந்தது



(லிஸ்பன்)

போர்த்துக்கல் நாட்டின் தலை நகர் லிஸ்பனில் நடந்து முடிந்த நேட்டோ நாடுகளின் உச்சிமாநாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாக அமெரிக்காவின் எதிரியாகக் கருதப்பட்ட ரஷ்யாவும் கலந்து கொண்டு தனது உதவி நேட்டோ நாடுகளுக்கு உண்டு என அறிவித்துள்ளது.

இதன் மூலம் பனிப்போர் முடிவு பெற்று விட்டதாக ஜெர்மனி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கலின் தலைநகர் லிஸ்பனில் நேட்டோ கூட்ட மைப்பின் உறுப்பினர்களான 28 நாடுகளின் உச்சி மாநாடு சமீபத்தில் நடந்தது.

இதில் ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகளை வாபஸ் பெறும் விவகாரம் முக்கியமான விடயமாக விவாதிக்கப்பட்டது. இம் மாநாட்டில் பேசிய ஆப்கானி ஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் 2014 க்குள் நேட்டோ படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநாட்டில் நேட்டோ செயலர் ஆண்டர்ஸ் போக் உரையாற்றுகையில், 2011 இல் இருந்து படிப்படியாக படைகள் வாபஸ் பெறப்படும்.

2014 க்குள் நாட்டின் பாதுகாப்பு ஆப் கான் படையினரிடம் ஒப்படைக்கப்படும் என்று அறிவித்தார். இம்மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் இதுகுறித்து கூறுகையில்,

ஆப்கான் படையினரிடம் அந்நாட்டை ஒப்படைப்பது என்பது அமெரிக்காவின் சுயேச்சையான முடிவு. அதுதான் இம்மாநாட்டில் நேட்டோ நாடுகளின் முடிவாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுகுறித்து இன்னும் ஒரு இறுதியான முடிவுக்கு அமெரிக்கா வரவில்லை. 2014 க்குள் ஆப்கான் போர் முடிந்து விடும் என்பதற்கில்லை. அங்குள்ள நிலவரத்தைப் பொறுத்து முடிவு மாறுபடும் என்றார்.

இதனால் 2014 க்குப் பின்னும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஆப்கானில் தங்கியிருக்கும் என்பது தெளிவாகியுள்ளது.

இம்மாநாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாக இதுவரை அமெரிக்காவின் எதிரியாக பார்க்கப்பட்டு வந்த ரஷ்யா மாநாட்டில் கலந்து கொண்டு நேட்டோ படைகளுக்கு உதவியளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது. (ஸ்ரீ)

## அமெரிக்கா மீதான தாக்குதல்கள் தொடரும்; அல்கொய்தா எச்சரிக்கை

அமெரிக்கா மீதான தாக்குதல்கள் தொடரும் என்று அல்கொய்தா அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

முன்னதாக கடந்த மாதம் அமெரிக்காவின் 2 சரக்கு விமானங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இந்நிலையில் இப்போது மீண்டும். மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவ்வமைப்பு வெளியிட்ட செய்தியில்,

ஏற்கனவே ஏமனில் இருந்து அமெரிக்காவுக்கு விமானத்தில் பார்சல் வெடிகுண்டை அனுப்பி அவற்றைத் தகர்த்தோம். இது போன்ற தாக்குதல்கள் தொடரும். இது போன்ற குண்டுகளுக்கான தயாரிப்புச் செலவும் குறைவு, வெடிக்கச் செய்வது எளிது. அமெரிக்காவை மண்டியிடச் செய்வதற்கு பெரிய அளவிலான தாக்குதல்கள் தேவையில்லை.

சிறுசிறு தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி அவர்களை வீழ்த்துவோம். பொருளாதார ரீதியில் பெரும் சேதத்தை ஏற்படுத்தி அமெரிக்காவை நிலைகுலையச் செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




## சீனச் சுரங்கங்களில் வெள்ளம்; 31 தொழிலாளர்கள் சிக்கித் தவிப்பு

(பீஜிங்)

சீனாவில்தென்மேற்கு பகுதியில்நெய்ஜியாங் நகரம் உள்ளது. அதன் அருகேயுள்ள பேடியான் என்ற இடத்தில் நிலக்கரி சுரங்கம் ஒன்று உள்ளது. நேற்று முன்தினம் அங்கு 41 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.


இந்த நிலையில் அங்கு திடீரென வெள்ளம் புகுந்ததைத் தொடர்ந்து அங்கிருந்து 13 பேர் வெளியேற்றப்பட்டனர்.

ஆனால், 28 பேர் வெளியே வர முடியாமல் உள்ளே சிக்கி கொண்டதை அடுத்து தண்ணீரை வெளியேற்றக்கூடிய 4 இயந்திரங்கள் அங்கு அனுப்பப்பட்டன. அவை தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இதற்கிடையே சீனாவின் குவாங்சி ஷீயாங் பகுதியில் உள்ள ஒரு இரும்பு சுரங்கத்திலும் வெள்ளம் புகுந்தது. இங்கு பணியில் இருந்த 3 தொழிலாளர்கள் சிக்கியுள்ளனர். அவர்களையும் மீட்கும் பணி நடக்கிறது.

சீன சுரங்கங்களில் இந்த ஆண்டு 6 மாதங்களில் நடந்த இது போன்ற விபத்துக்களில் சிக்கி 187 பேர் பலியாகி உள்ளனர். இதற்கு அங்குள்ள பாதுகாப்பு குறைபாடுகள் தான் காரணம் என கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

## நடராஜர் வடிவத்தில் ஒபாமா; அமெரிக்க இந்துக்கள் எதிர்ப்பு




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பிரபல வார பத்திரிகை ஒன்று தனது சமீபத்திய இதழின் அட்டைப் படத்தில் அந்நாட்டு அதிபர் பராக் ஒபாமாவை நடராஜர் வடிவத்தில் சித்திரித்து படம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் பிரபல வார பத்திரிகை நியூஸ்வீக். இதன் 22 ஆம் திகதி இதழின் அட்டைப் படத்தில் ஜனாதிபதி ஒபாமா நடராஜர் வடிவத்தில் நிற்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

அவருக்கு பல கைகள் இருக்கின்றன. ஒரே நேரத்தில் அவர் பல்வேறு அரசியல் கொள்கைகளை சமாளிக்கும் விதத்தை இந்தப் படம் சித்திரிக்கிறது. இதுகுறித்து அந்நாட்டில் உள்ள இந்து அமைப்புகள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

வோஷிங்டனில் இயங்கும் இந்து அமெரிக்க நிறுவனத்தின் (எச்.ஏ. எப் ) நிர்வாக இயக் குநர் சுகக் சுக்லா கூறுகையில்,

இந்துக்களின் ஆன்மீகத்தோடு அவர்களது கடவுள்களின் விக்கிரகங்களுக்குத் தொடர்பிருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் இந்து கடவுள்களின் வடிவங்கள் விளம்பரங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்தார்.

எச்.ஏ.எப். இன் அசோசியேட் இயக்குநர் ஜாய் கன்சாரா கருத்துரைக்கையில்,

இந்து மதத்தைப் பற்றிய புரிதலில் அறியாமை இருப்பதாலோ அல்லது அது வெளி நாட்டில் இருந்து வந்த ஒரு மதம் என்பதாலோ பர்கர் கிங் விளம்பரம் இண்டியானா ஜோன்ஸ் படங்கள் அல்லது இப்போது வெளிவந்துள்ள நியூஸ்வீக் அட்டைப்படம் ஆகியவற்றில் இந்துக் கடவுள்களின் வடிவங்கள் சித்திரிப்புக்கு உள்ளாகின்றன என்று கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## உலகின் மிகப்பெரிய இயேசுசிலை; போலந்து நாட்டில் நிறுவப்பட்டது



(வார்சா)

உலகின் மிகப்பெரிய இயேசு நாதர் சிலை போலந்து நாட்டில் உள்ள மேற்கு மாகாணமான சுவி போட்டிசன் மலைப் பகுதியில் நிறுவப்பட்டுள்ளது.

போலாந்து நாட்டின் முக்கிய சுற்று லாத்தலமான இந்தப்பகுதியில் இச்சிலை நிறுவப்பட்டுள்ளதால் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.


33 மீற்றர் உயரமும் 17 மீற்றர் அகலமும் கொண்ட இந்தச் சிலையை அந்நாட்டின் தலைமை மதகுருவான சில்வைஸ்டர் சுவாட்ஸிகி என்பவர் வடிவமைத்துள்ளார். நாட்டின் பெருமைமிக்க இந்த சிலை திறப்பு விழாவில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

சிலையின் பீடம் அருகே போலந்து நாட்டு தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் அங்கு பிரார்த்தனையும் நடைபெற்றது. இதற்கு முன்பு மிகப்பெரிய இயேசு சிலை பிரேசில் நாட்டின் ரியோ-டி-ஜெனிரோவில் உள்ளது. அதனை இந்த சிலை முறியடித்துள்ளது. (ஸ்ரீ-2)



சீனாவின் நானிங்கில் உள்ள தேன் வளர்ப்பு மையத்தின் தலைவர் யாங் சுவாங் (இடது) மற்றும் பணியாளரின் உடல் முழுவதும் போர்வையால் போர்த் தப்பட்டது போன்று தேனீயால் மூடப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.





ஜனாதிபதி இரண்டாவது தடவையாக பதவியேற்றதன் பின் நேற்றைய தினம் மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் அரச உத்தியோகத்தருக்கான புதிய சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தேசியக் கொடி ஏற்றுவதையும், திணைக்களத்தில் கடமை புரியும் அரச உத்தியோகத்தர்கள் புதிதாக சத்தியப் பிரமாணம் செய்வதையும், கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் என்.குமார்)

# சாதாரண தர மாணவர்களுக்கு இருநாட்கள் பயிற்சிப் பட்டறை

(அல்வாய்)

“இளைஞர்களுக்கான நாளை” அமைப்பினால் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த. (சா/த) இல் கற்கும் மாண வர்களுக் கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக் கம் 3.30 மணிவரை யா/ வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் க.பொ.த(சா/த) மாணவர்களை பொறுப்பாசிரியர்களுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 27 ஆம் திகதி ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் 28 ஆம் திகதி கணிதம், தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய பாடங்களும் நடைபெறவுள்ளன.

மாணவர்கள் மதிய உணவு கொண்டு வருமாறு வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். -(ஸ்ரீ-19)

# வீதிகளை அகலமாக்குவது தொடர்பான கூட்டம் இன்று

(கொழும்புத்துறை)

நல்லூாப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பலாலி வீதி, காங்கேசன்துறை வீதிகளை அகலமாக்குவது தொடர்பான மக்களின் கருத்தை அறிந்துகொள்வதற்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இரு வேறிடங்களில் நடைபெறவுள்ளது.

பலாலி வீதியை அகலமாக்குவது தொடர்பான கூட்டம் காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் முன்னைய கட்டடத் திலும் கே.கே.எஸ். வீதியை அகலமாக்குதல் தொடர்பான கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-51)




# மரத்துடன் கட்டிவைத்து தாக்கியதில் குடும்பஸ்தர்கள் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சியைச் சேர்ந்த சமையல் தொழிலாளர்களான குடும்பஸ்தர்கள் இருவர் சங்கத்தானைப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து அப்பகுதியைச் சேர்ந்த இருவரால் மரத்துடன் கட்டிவைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவர்களுடைய தேசிய அடையாள அட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கடந்த 19ஆம் திகதி சங்கத்தானைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வேலை செய்வதற்கு இருவரும், சென்றுள்ளனர். அங்கு இருவரும் சமையல் வேலை செய்ய இருவருக்குமாக 4ஆயிரம் ரூபா கூலி கேட்டுள்ளனர். ஆனால் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் இருவருக்கும் தலா 1000 ரூபா தருவதாகக் கூறியுள்ளனர்.

இதைச் சம்மதிக்காததனால் வாக்குவாதம் ஏற்பட இருவரும் தாம் வேலை செய்யவில்லை என்று வீட்டுக்கு வெளியில் வந்துள்ளனர். கோபமடைந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர் இரு சமையல்காரர்களையும் மரத்தில் கட்டிவைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இச் சம்பவத்தில் பலத்த காயம் அடைந்த நெல்லியடியைச் சேர்ந்த நாராயணன் கிருஷ்ணன் (வயது 47) அத்துடன் அவர் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யும் வரணி கரம்பனைச் சேர்ந்த இராசையா சந்திரசேகரம் (வயது 45) என்ற இரு குடும்பஸ்தர்களுமே பலத்த அடிகாயங்ளுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-24)

# வீதி விளக்குகள் பொருத்தப்படாததால் இரவில் பயணிக்க முடியாத நிலை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஐயா கடைச் சந்தியில் இருந்து மணியம்தோட்டம் வரையுள்ள வீதிகள் வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கியுள்ளது.

இதனால் இப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில் இவ்வீதியால் பயணிப்பவர்கள் சிரமப்படுவதுடன் வீதி புனரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருவதால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-51)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் நேர்முகத் தேர்வுக்குரிய ஆவணங்களுடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யா/ புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கு தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் அறிவித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் இவ் டிப்ளோமா பயிற்சியை வழங்கும் ஆறுதல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் முன்னாள் வடக்கு -கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான சுந்தரம் டிவகலாலா சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இதேவேளை இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்காத க.பொ.த.(சா/த) பரீட்சையில் நூதன சித்தி பெற்ற ஆசிரியர்களும் ஆவணங்களுடன் சமூகம் தரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

# தரம் -4 மாணவர்களின் தேர்ச்சி மட்டம் தொடர்பான வதிவிடப் பயிற்சி

(அல்வாய்)

வடமாகாண கல்வியமைச்சினால் தரம் 4 மாணவர்களின் தேர்ச்சி தொடர்பான வதிவிடப்பயிற்சி இம்மாதம் 26,27 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 6.30 மணிவரை கோப்பாயிலுள்ள சங்கமம் பயிற்சி மத்திய நிலையத்தில் நடைறெும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதில் தரம்-4 மாணவர்களின் தேர்ச்சி மட்டம் பற்றிய தேசிய மதிப்பீடும் ஆய்வும் கல்வி அறிக்கைப் பெறுபெறும் சிபார்சும் பற்றி வடமாகாண ஆரம்பக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளதுடன் 50 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பாடசாலைகளில் நடைபெற்ற கற்றல் பற்றிய அறிவுறுத்தல் செய்யும் இரு நாட்களுக்கான வேலைத் திட்டமும் நடைபெறவுள்ளது.

கல்வியமைச்சின் மேலதிக செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலைத் திட்டம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் உள்ள ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை இவ் வதிவிட செயலமர்வில் தவறாது பங்குபற்றும்படி கேட்கப்பட்டுள்ளது.

இவ் வதிவிட செயலமர்வுக்கான உணவு, தங்குமிடம் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்கள் முதல் நாளான 25 ஆம் திகதி தங்குவதற்கு தங்களுடைய பெயர்களை மாகாணக் கல்வி திணைக்கள ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேஸ்கரனுக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

# அறிவியலில் முன்னேற்றம் பெற்றுள்ளபோதும் ஆற்றல்களை வளர்ப்பதில் பின்தங்கியுள்ளோம்

## கலாநிதி என்.ஸ்ரீதர்ஷனன் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

எமது தமிழ்ப் பிரதேசங்களில் அறிவுத் தேடல்கள் புத்தகக் கல்வியையும் பரீட்சை முடிவுகளையும் வைத்து தரம் பிரிக்கப்படுகிறது.

இதன்காரணமாக அறிவியல் வெற்றி பெற்றுக்கொள்ளும் அளவிற்கு ஆற்றல்கள், திறமைகள் முனைப்புடன் வெளிவராமல் இருப்பது எமது கற்பித்தலில் உள்ள இடைவெளியாகும். இவ்வாறு பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட குரலிசை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். ஸ்ரீதர்ஷனன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்ற “புல்லனைச்சுடர்” இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கே இசைத் துறையில் அடிப்படைக் கல்வியை பூரணமாக கொடுத்து விடுகின்றார்கள். அதனால் தான் ஆற்றலில் மேம்பட்ட பாடல்களை நாம் கேட்கக் கூடியதாக உள்ளது.

இந்தியர்களுடைய அறிவிற்கு சமமானவர்களாக நாம் இருந்தும் ஆற்றல்களை வளர்த்துக்கொள்வதில் பின்தங்கியுள்ளோம். இந்த நிலையை திருமறைக் கலாமன்றத்தின் இசைத் துறையினர் மாற்றமுடியும் என்ற நம்பிக்கையை “புல்லனைச்சுடர்” இறுவெட்டு ஓரளவேனும் மன நிறைவைத் தருகிறது. சுருதி, லயம் என்பது நவீன உத்திகளுடன் இணைக்கப்படும் போது எளிதாகி விடுகிறது.

இருந்தாலும் சுருதியோடு ஒன்றித்துப் பாட எமது நாட்டுப் பாடகர்கள் மேலும் தமது திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்றார். (ஸ்ரீ-51)

## காணிப்பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வலிகாம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளராக தில்லையம்பல வாணர் விமலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

இவர் முன்பு வடமாகாண காணி நிர்வாக திணைக்களத்தின் கீழ் பளைப்பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையேயான கலந்து ரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். வணிகர் கழக பணிமனையில் நடை பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வர்த்தகர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதால் வர்த்தகர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். வணிகர் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 15 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த புலோலி றோ.க.த.க. பாடசாலை திறப்பு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் கடந்த 15 ஆண்டு காலமாகமூடப்பட்டிருந்த புலோலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலை புலோலி கிராமக் கோட்டுக்கு அருகாமையில் உள்ள தேவாலய வளவிற்குள் முன்பு இயங்கி வந்தது.

இக் கட்டடம் மிகவும் பழைமை வாய்ந்த கட்டடமாக இந்தமையாலும் நாட்டின் போர்க் கால சூழ்நிலை காரணமாக இங்கு கல்வி கற்ற மாணவர்கள் வேறுபாடசாலைக்குச் சென்றமையால் இதனை தற்காலிகமாக மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தற்போது ஜனாதிபதியின் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் இக் கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தலுக்குரிய சகல வேலைகளும் இடம்பெறவுள்ளது.

எனவே இப்பாடசாலையின் தரம் 1 தொடக்கம் 5 வரையிலான வகுப்புக்களை மூடுவதற்கு பாடசாலை அபிவிருத்தி சங்கம் கல்வித் திணைக்களத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கனவே இங்கு கல்வி கற்ற மாணவர்களின் நன்மை கருதி தம்பசிட்டி வீதியின் வடக்குப் புறமாக அமைந்துள்ள இவ் ஆரம்பப் பிரிவை புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் பெயரால் திறப்பதற்கு புலோலி கல்விச் சமூகம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் பத்து ஆண்டு காலமாக பெண் பிள்ளைகளுடன் மட்டும் இயங்கிய பாடசாலை எதிர்காலத்தில் அப்பகுதி ஆண்பிள்ளைகள் கற்பதற்கு வாய்ப்பாக இருப்பதாக பெற்றோர்கள் தமது சம்மதத்தையும் தெரிவித்துள்ளார்கள். (ஸ்ரீ-19)

# குண்டாக இருப்பவர்களுக்கு உணவின் வாசனையை நுகரும் திறன் அதிகம்

**ஆய்வில் தகவல்**

(லண்டன்)

குண்டாக இருப்பவர்களுக்கு உணவு வாசனையை மோப்பம் பிடிக்கும் திறன் அதிகம் உள்ளது என பிரிட்டன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனிதர்கள் பசியாக இருக்கும் போது வாசனைகளை நுகரும் போது ஏற்படும் இரசாயன மாற்றங்கள் குறித்து போர்ட்ஸ்மவுற் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர். இதில் ஒல்லியாக இருந்தவர்களை விட குண்டாக இருந்தவர்கள் உணவின் வாசனையை எளிதில் மோப்பம் பிடித்து விடுவது தெரியவந்தது.

இது குறித்து ஆய்வுக்குழுவில் பங்கேற்ற விஞ்ஞானியான லோறன்சோ ஸ்டார் போர்டு கூறுகையில்,

குண்டாக இருப்பவர்களுக்கும் உணவின் வாசனைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. குண்டாக இருப்பவர்கள் உணவின் வாசனையை எளிதில் மோப்பம் பிடித்து விடுதவதால் அவர்களுக்கு மற்றவர்களை விட எளிதில் பசி வந்து விடுகிறது.


மேலும் உணவின் வாசனை அவர்களை அதிகமாக சாப்பிடத்தூண்டுகிறது. இதுவே அவர்களின் உடல் எடை அதிகரிக்க முக்கிய காரணமாகும். இந்த ஆய்வு மூலம் உடல் எடை அதிகரிப்பிற்கான காரணங்கள் குறித்த ஆராய்ச்சிகளைத் தொடர்வதற்கு ஒரு மைக் கல்லாக அமையும். உடல் எடை அதிகரிப்பால் பாதிக்கப்படும் ஏராளமானோர் பயனடைய வாய்ப்பு ஏற்படும் என லோறன்சோ ஸ்டார்போர்டு கூறினார். (ஸ்ரீ-2)

## கனடாவின் வாழ வைப்போம் அமைப்பினால்

# கிளிநொச்சி பாடசாலைகளுக்கு உபகரணங்கள் கையளிப்பு

(கொழும்பு)

கனடாவில் உள்ள வாழ வைப்போம் அமைப்பின் ஊடாக சிவரூபன் என்பவரின்



உதவியுடன் கிளி .புனித திரோசாள் மகளிர் கல்லூரிக்கு கணனி ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை சமூகம் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க மேற்படி கணனி வழங்கப்பட்டுள் ளது.

இதனை அண்மையில் பாடசாலையில் நடந்த நிகழ்வொன்றில் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் சூரி பாடசாலை அதிபரிடம் வழங்கினார்.

இதில் திருவையாறு வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகாவித்தியாலயம்,இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை என்பவற்றிற்கே வழங்கப்பட்டன.

இவற்றில் முதல் கட்டமாக வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கான ஒலி பெருக்கியை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் சூரி பாடசாலை உப அதிபரிடம் கையளித்தார்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் மற்றும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வேப்பமரக் குற்றிகளை கடத்திய நபரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் 15 வேப்பமரக் குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவரிடம் இருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான 15 வேப்பமரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக காத்தான் குடிப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி காமினி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

லொறி ஒன்றின் மூலம் கடத்தி வரப்பட்ட மரக்குற்றிகள் தாழங்குடா மற்றும் புதுக் குடியிருப்புப் பகுதிகளில் மறைத்து .வைக்கப்பட்டிருந்த போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தி வரப்பட்ட லொறியுடன் சாரதி தப்பி ஓடியுள்ளதுடன் பொலிஸார் லொறியைத் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட நபர் நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக வும் காத்தான் குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் அடுத்த மாதம் திருமலையில் ஆரம்பம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் அடுத்த மாதம் 17, 18, 19 ஆம் திகதிகளில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2001 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரைக்குமான காலப் பகுதியில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மக்கள் சாட்சியமளிக்க உள்ளனர்.

இக்காலப் பகுதியில் இடம்பெற்ற கொலை, கடத்தல், காணாமல் போதல், கப்பம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆணைக் குழு முன் சாட்சியமளிக்க முடியும்.

இவ்வாணைக்குழு முன் அதிகாரிகள் பொது மக்கள் அனைவரும் தமது சாட்சியங்களை வழங்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)





யாழ்.மாநகரசபையால் இரு முன்பள்ளிகளுக்கு தலா 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியங்கள் நேற்று யாழ்.மாநகர சபையில் வைத்து கையளிக்கப்பட்டது.இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜா மேற்படி உபகரணங்களை யாழ்.மாநகர சபை முன்பள்ளி ஆசிரியர் மற்றும் நாவாந்துறை சென் நீக்கிலஸ் முன்பள்ளி ஆசிரியர்களிடம் கையளிப்பதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

வந்தோம் ஐயா! சபைக்கு
வந்தனம் தந்தோம் ஐயா!
– வசந்தன் நாட்டுக்கூத்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கிருஷ்ணா வருக! எஸ்.எம். கிருஷ்ணா வருக! தமிழர் குறை தீர்க்க கிருஷ்ணா வருக!

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் 27ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்.

யாழ்ப்பாணத்திற்கு வரும் அவருக்கு எங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதாக, அரங்க ஆற்றுகை நிகழ்வொன்றை நடத்துவதாக கற்பனை செய்து கொண்டோம்.

அரங்க ஆற்றுகை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் பிரமுகர்கள் பலரும் இருக்கின்றனர்.

அரங்க ஆற்றுகையில் நடிப்பதற்காக ஒரு குழுவினர் தயார் நிலையில்.

தயாரிப்பாளர் அந்தக் குழுவினருக்கு கண்டிப்பான உத்தரவொன்றை பிறப்பித்திருந்தார்.

அது என்னவெனில், கடற்றொழில் பிரச்சினை, வலி. வடக்கில் மீள்குடியமர்வு, தூத்துக் குடி கப்பல் சேவை, சங்ககாலத்து தமிழன், பண்டார வன்னியன் பரம்பரை இப்படி பழங்கதை பேசுவதற்குப் பலரும் முந்தியடிப்பர்.

அதற்கு முன்னதாக நீங்கள் மேடையில் பாய்ந்து ஏறிவிடுங்கள் என்பதே அந்த உத்தரவு.

தயாரிப்பாளரின் உத்தரவை சிரமேற் கொண்ட ஆற்றுகைக்குழு, மேடையேறுகின்றது.

கிருஷ்ணா வருக!... எஸ்.எம். கிருஷ்ணா வருக.. தமிழர் துயர் துடைக்க கிருஷ்ணா வருக ...

இவ்விதம் பாடியவாறு இருவர் செல்ல, மேலும் இருவர் 'துரியோதனன் சபையினிலே தூதுவந்தாய் கிருஷ்ணா, பாண்டவர் துயர் துடைக்க (தமிழர்) தூது வந்தாய் கிருஷ்ணா.

முகர்ஜியால எதுவும் செய்ய முடியவில்லை கிருஷ்ணா! கருணாநிதியும் கடிதமெழுதி களைத்து விட்டார் கிருஷ்ணா ...

துச்சாதனன் சீனாவும் நுழைந்துவிட்டான் கிருஷ்ணா. உங்கள் தேசத்திற்கு சகுனியான பாகிஸ்தானும் வந்துவிட்டான் கிருஷ்ணா ... இவ்வாறு அந்த இருவரும் பாட...

மேலும் நான்கு பேர் மேடையேறுகின்றனர். தகிட..தகிட...தகிட...தாம் ...தீம்...முன்னம் ஒரு பார்த்தசாரதி வந்தார். அவர் தூதினிலே பாரதம் எடுத்தது முடிவு.

வன்னியில் இப்போது நடந்த கொடூரம். வந்தார் பிரணாப் முகர்ஜி, அவர் செய்தது எதுவுமில்லை.

பின்னமும் ஒரு குழு. அது டி.ஆர் பாலுவின் தலைமையில் வந்தது. அலரி மாளிகையில் ஏச்சுவேண்டிச் சென்றது சென்னை.

நிருபமா அம்மையாரும் வந்தார். முடிபு ஏதுமில்லை கிருஷ்ணா. எங்கள் துயர்பாரும் கிருஷ்ணா. இங்கு பிரச்சினை ஏதும் இல்லையாம். கேளும் நாவற்குழியில் இப்போ தமிழர் நாமம் போச்சு.

எங்கள் அரச மரத்தில் இப்போ அந்தக் கிருஷ்ணன் இல்லை கிருஷ்ணா. புத்தனை இருத்தி புதுப் புராணம் படிக்கிறார் கேளீர்.

வன்னியில் எங்கள் இனம் வாடுதய்யா, வதை முகாமிலும் சாகுதையா.

பாரையா கிருஷ்ணா பாரையா. பாரதம் கைவிட்டால் எங்களை காப்பது யாரய்யா?

வந்த நீவிர் எமக்கு முடிபு சொல்லும் ஐயா! வெறும் வார்த்தைகள் எதுவும் வேண்டாமையா.

# நாட்டின் முன்னிலை மாவட்டமாக யாழ்ப்பாணத்தைக் கொண்டுவரவேண்டும்

## யாழ். அரச அதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் முன்னிலை மாவட்டமாக யாழ். மாவட்டத்தைக் கொண்டுவர அனைவரும் முன்வரவேண்டும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கிணங்க அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் இரண்டாவது பதவிக்காலத்தின் முதல்நாள் அலுவலகப்பணிகள் நேற்று ஆரம்பமானது. இதனை ஒட்டி தனது கருத்தினை வெளிப்படுத்துகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலாவது தடவையாக இந்நாட்டு ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவுடன் மகிந்த சிந்தனை என நீண்டதொரு தொலைநோக்குடைய அபிவிருத்திப் பாதையில் சிந்தனைகளை இந்நாட்டு மக்களுக்காக முன்வைத்தார்.

இம் மகிந்தசிந்தனைக் கோட்பாடு முற்றிலும் இந்நாட்டில் அபிவிருத்தியையும், எதிர்கால சுபீட்சத்தையும் அடிப்படையாகக் கொண்டது. மகிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை எய்துவதற்காக நீங்கள் எல்லோரும் அர்ப்பணிப்புடன் உங்கள் சேவைகளை நல்கி வருகின்றமைக்காக உங்களைப் பாராட்டுவதுடன் அரசு சார்பாக உங்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது தடவையாக இந்நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமான நாடாகவும், ஆசியாவின் உன்னதமான நாடாகவும் ஆக்கவேண்டுமென திடசங்கர்ப்பம் கொண்டுள்ளார்.

அரசின் இத்தகைய சிறந்த நோக்கை எய்துவதற்காக அதன் பங்காளியானநாம் அரச சேவையாளர் என்ற வகையில் எமது முழுமையான பங்களிப்பை நல்கி குறிப்பிட்ட இலக்கை அடையப் பாடுபடுவாம் என திடசங்கர்ப்பம் கொள்வோம்.

உடலிலுள்ள உறுப்புக்களில் எல்லாம் சிரசே பிரதானமானது. இந்நாட்டில் தலையாக விளங்குகின்ற யாழ்.மாவட்டத்திற்கு நாம் சேவையாற்ற கிடைத்த வாய்ப்பு ஒரு அரிய வரப்பிரசாதமாகும்.



எமது திறமையான சேவையும் அதன் ஆக்கபூர்வமான விளைவும் இந்நாட்டிற்கு அவசியமானதும் மகத்துவம் மிக்கதுமாகும்.

போட்டியிடாது எவரும் முன்னிலை அடைய முடியாது. எனவே நாம் போட்டியிட்டு எமது மாவட்டத்தை இவ் இலங்கையில் முதலிடத்திற்கு கொண்டுவருவோம் என்ற சிந்தனையை நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுங்கள். எமது மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஏதுவான காரணிகளான பொருளாதாரக் கட்டமைப்பு, மீள் குடியமர்பு, நிலைபேறான அபிவிருத்தி, மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதல், கல்வி, கலை, கலாசார விழுமியங்களைப் பேணலும் அவற்றின் தரத்தினை உயர்த் தலும் சாந்தியும் சமாதானமும் புரிந்து ணர்வுமுள்ள சமூகத்தை கட்டியெழுப்புதல் போன்றவை எம்முன்னால்உள்ள பணிகளும் பொறுப்புக்களும் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச–6)

# ஐ.தே.கவின் ஆயுட்காலத் தலைவராக ரணில் இருந்துவிட முடியாது

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு



(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு வாக்கெடுப்பின் மூலமாகவே இடம்பெற வேண்டும் என அக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் தலைமைப் பதவிக்கு போட்டியிடுபவருமான சஜித் பிரேமதாச அறிவித்திருக்கிறார்.

கண்டி மாவட்டத்திலுள்ள குண்டசாலைப் பகுதியில் இடம்பெற்ற கட்சியின் கிராம யாத்திரை திட்டத்தின்கீழ் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த சஜித் பிரேமதா, கட்சியின் தற்போதைய தலைவர் அதன் ஆயுட்காலத் தலைவராக இருந்துவிட முடியாது என வும் வலியுறுத்தினார்.

தற்போதைய நிலையில் என்ன நடைபெறுகிறது என்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஒருவர் அதன் ஆயுட்காலத் தலைவராக தொடர்ந்தும் இருந்து கொள்கின்றார். ஆனால் யாருமே கட்சியின் தலைவராக ஆயுட்காலம் முழுவதும் இருந்துவிட முடியாது என்பதைத்தான் கட்சி யாப்பு கூறுகின்றது எனவும் சஜித் பிரேமதாச சுட்டிக் காட்டினார்.

கட்சித் தலைவர் பதவி தொடர்பாக கருத்து ஒருமைப்பாடு இருந்தால் பரவாயில்லை. இல்லையெனில் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதைத்தான் கட்சியின் யாப்புக் குறிப்பிடுகின்றது எனவும் தெரிவித்த சஜித் பிரேமதாச அதன்படி கட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (ச–5)

# பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படல் வேண்டும்

## அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களில் உக்கிரமடைந்துள்ள பிரச்சினைகளுக்கு உரிய தீர்வின்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்கலைக்கழகங்களுக்கு வரக்கூடாது. பொது மக்களின் நிதியை மோசடி செய்து பிறந்தநாள் மற்றும் பதவி ஏற்பு விழாக்களுக்காக கோடி கணக்கில் செலவிடும் அரசாங்கத்திற்கு நூறு ரூபாய் செலவழித்து பல்கலைக் கழகத்திற்கு புல்லாங்குழல்களை வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு பயணங்களை கொடுத்தும் நிதிகளை வழங்கியும் மாணவர்களின் போராட்டத்தை அரசாங்கத்தினால் அடக்க முடியாது. அதற்கு அரசாங்கத்தின் அமைச்சர்கள் தான் உகந்தவர்களாவர் எனவும் அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

# சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



ஒரே ஒளிதான் பல்வேறு வண்ணக் கண்ணாடிகளின் மூலம் பல நிறங்களில் வருகிறது. நம்மை மாற்றி அமைத்துக் கொள்ள இந்த வேறுபாடுகள் அவசியம். ஆனால், எல்லாவற்றின் மையத்திலும் அதே உண்மைதான் ஆட்சி புரிகிறது. கிருஷ்ணாவதாரத்தின் போது இந்துக்களுக்கு பகவான், முத்து மாலையிலுள்ள 'முத்துக்களைக் கோர்க்கின்ற நூல் போல நான் எல்லா மதங்களிலும் இருக்கிறேன்.

மக்களினத்தை உயர்த்திப் புனிதப்படுத்தும் அசாதாரணமாக தூய்மையும் அசாதாரணமான ஆற்றலும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன் என்று அறி' என்று சொன்னார்.

அதன் பலன் என்ன? இந்துக்கள் மட்டுமே காப்பாற்றப்படுவார்கள், மற்றவர்கள் காப்பாற்றப்படமாட்டார்கள் என்று சமஸ்கிருத தத்துவ இலக்கியத்தில் எங்காவது கூறப்பட்டிருக்கிறதா என்று கண்டு பிடிக்கும்படி நான் உலகத்திற்குச் சவால் விடுகிறேன். 'நமது ஜாதிக்கும் கோட்பாடுகளுக்கு அப்பால் கூட நிறை நிலை பெற்றவர்களைக் காண்கிறோம்' என்கிறார் வியாசர்.

## நளினியின் மனு குறித்து ஆய்வு செய்யுமாறு தமிழக அரசுக்கு மேல் நீதிமன்றம் உத்தரவு

ராஜீவ் கொலைக்குற்றவாளி நளினி புழல் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்யவேண்டும் என்று தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

இது சி.பி.ஐ.விசாரித்த வழக்கு என்பதால் மாநில அரசு எந்த முடிவும் எடுக்கமுடியாது என்று தமிழக அரசு அவரது கோரிக்கையை நிராகரித்தது.

இதையடுத்து நளினி தன்னை முன் கூட்டியே விடுதலை செய்யக்கோரி சென்னை மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவை தனி நீதிபதி விசாரித்து தள்ளுபடி செய்தார்.

இதை எதிர்த்து நளினி மீண்டும் மேன் முறையீடு செய்தார்.இம்மனுவை டிவிசன் குழு தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யுமாறு கேட்ட நளினி மீண்டும் சென்னை மேல் நீதிமன்றில் மனுதாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் தர்மாராவ், ஹரி பரந்தாமன் ஆகியோர் 2 வார காலத்துக்குள் பதில் அளிக்குமாறு தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். (ஸ்ரீ)



திருவண்ணாமலையில் நடந்த கார்த்திகை தீப விழாவையொட்டி, மலை உச்சியில் ஏற்றப்பட்ட மகாதீபத்தை பக்தர்கள் பரவசத்துடன் பார்த்து வழிபடுவதைப் படத்தில் காணலாம்.

## இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்க சபையில் தீர்மானம்

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக இடம்பெற இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்து அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. எடுக்க வேண்டும் என்று தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த முயற்சிக்கு உதவும் வகையில் ஐ.நாவின் 23ஆவது விதியை திருத்த வேண்டும் என்றும் சர்வதேச அமைதிக்கு இந்தியாவின் பங்களிப்பும் கொள்கையும் முக்கியமானது.உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் அனைத்து அரசியல் கருத்துக்களையும் வெளிப்படுத்த சுதந்திரம் உள்ளது என்றும் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிநிதிகள் சபையில் இத் தீர்மானத்தை கஸ்பிலிராகிஸ் கொண்டு வந்தார்.

அடுத்த கட்ட நடவடிக்கைக்காக இந்தத் தீர்மானம் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (ஸ்ரீ)

## தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் ஒப்பந்தம் கைச்சாத்திட வேண்டும்

### ஈழ அகதிகள் மறுவாழ்வு கழக தலைவர் தெரிவிப்பு

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்பும்போது அவர்கள் தொடர்பில் உடன்படிக்கை செய்து கொள்ளப்படல் வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகள் 72 ஆயிரம் பேர் இந்தியாவில் உள்ள 112 முகாம்களில் தங்கி யுள்ளனர். அத்துடன் முகாம்களில் பதிவு செய்யாமல் 1.2 இலட்சம் பேர் இந்தியாவில் இருப்பதாக ஈழ அகதிகள் மறுவாழ்வுக் கழகத் தலைவர் சந்திர காந்தன் தெரிவித்துள்ளார். இவர்கள் இலங் கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புகின்றனர். இவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் பிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்த அகதிகள் நாடு திரும்பும் போது பட்டதாரிகளுக்கு உரிய வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட முற்பட்ட விடயங்கள் தொடர்பில் இரண்டு நாடுகளும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் என சந்திரகாந்தன் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## தமிழகத்தில் குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

### இளங்கோவன் தெரிவிப்பு



தமிழகத்தில் குடும்ப ஆட்சியை முடிவுக் குக் கொண்டு வர காங்கிரஸ் கட்சியினர் ஒன்று திரண்டு பாடுபடவேண்டும் என முன்னாள் இந்திய இணையமைச்சர் தெரிவித்துள்ளார்.கோபியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய இணையமைச்சர் இளங்கோவன் பேசியதாவது,

காங்கிரஸ் கட்சியில் பலபேருக்கு திறமை இருந்தாலும் வாய்ப்புக்கள் இல்லாமல் போய் விடுகிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் தான் தமிழகத்தின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். அத்தகைய ஆட்சியை தமிழகத்தில் ஏற்படுத்த நாம் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும். தமிழகத்தின் நிலைமை தற்போது மிக மோசமாகவுள்ளது.

வரும் தேர்தலில் எதையாவது செய்து ஆட்சியைப் பிடித்தே தீரவேண்டும். அதற்காக எந்தத்தியாகத்தையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். தமிழகத்தில் மீண்டும் பரம்பரை ஆட்சி வந்துவிடும் என்ற பயம் ஏற்பட்டுள்ளது.தவறுகளை சுட்டிக்காட்டினால் கோபப்படுகின்றனர்.

நீயும் இதையே செய் ஜால்ரா போடு என்கின்றனர் நான் யாருக்கும் ஜால்ரா போடுகிறவன் இல்லை. ரூபா.1.76இலட்சம் கோடி ஊழல் நடந்துள்ளதை நினைத்துப்பார்க்கும் போது பயமாகவுள்ளது. இந்தத்தொகைக்கு எத்தனை சைவர் என்று பலருக்குத் தெரியாது.

சத்துணவுடன் இலவச கல்வியைக் கொண்டுவந்தவர் காமராஜர் அந்தத் திட்டத்திற்காக பட்ஜெட்டில் அன்றைய கால கட்டத்தில் நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த பட்ஜட்டால் பல்வேறு நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழகத்தில் குடும்ப ஆட்சியை நீடிக்க விடக்கூடாது .இதன் பிடியில் இருந்து தமிழக மக்களை காப்பாற்றியாக வேண்டும். இந்த நிலை நீடித்தால் தமிழகம் என்னவாகும் என நினைத்துப் பாருங்கள். இவ்வாறு இளங்கோவன் பேசினார். (ஸ்ரீ)

## பாரதச் செய்திகள்

## தனி மாநிலம் கிடைக்கும் வரை தெலுங்கானா போராட்டம் தொடரும்

### சந்திரசேகரராவ் ஆவேசம்



தெலுங்கானா தனி மாநிலம் கிடைக்கும் வரை போராடுவோம் என தெலுங்கானா ராஷ்டிரிய சமிதிக் கட்சித் தலைவர் சந்திரசேகரராவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஐதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆந்திராவில் உள்ள தெலுங்கானா பகுதியை மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து புறக்கணித்து வருகி றது. இதனால் தான் தெலுங்கானா தனி மாநிலம் கேட்டு போராடி வருகிறோம்.

இதற்காக பல்வேறு கட்சிகள், அமைப்புக்கள் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன.

தெலுங்கானா போராட்ட குழு என்ற பெயரில் மத்திய மாநில அரசுகளை கண்டித்து தொடர் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இதை முறியடிக்கும் வகையில் தெலுங்கானா போராட்டக் குழுவை கலைக்க மத்திய அரசு சதி செய்து வருகிறது.இது ஒருபோதும் நடக்காது. நாங்கள் ஒன்றாக இணைந்து தெலுங்கானா தனி மாநிலம் கிடைக்கும் வரை போராடுவோம். இன்னும் ஓரிரு மாதங்களில் மாணவர்களுடன் இணைந்து போராட்டத்தை தீவிரப் படுத்துவோம் என்றார். (ஸ்ரீ)



கார்த்திகை பௌர்ணமியையொட்டி, வாரணாசி கங்கை ஆற்றில் ஏராளமான பக்தர்கள் புனித நீராடுவதைப் படத்தில் காணலாம்.

## சபரிமலையில் கனமழை ; பம்பையில் வெள்ளப்பெருக்கு

(திருவனந்தபுரம்)


சபரிமலையில் பலத்த மழை பெய்ததால், பம்பை ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இதனால் பக்தர்கள் கவனத்துடன் குளிக்கும்படி பொலிஸார் எச்சரித்து வருகின்றனர். சபரிமலை ஐயப்பன் கோயிலில் நாளுக்கு நாள் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது.சனி, ஞாயிறு விடுமுறை நாள் என்பதால் கடந்த 2 தினங்களாக பக்தர்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல் காணப்பட்டது.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை மாலை சபரிமலையில் பலத்த மழை கொட்டியது. நள்ளிரவு வரை மழை நீடித்தது. இதனால் பம்பை ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. பம்பையில் குளிக்கச் செல்லும் பக்தர்கள் கவனமாக இருக்கும் படி பொலிஸார் எச்சரித்து வருகின்றனர். இதே வேளை கோவை மாவட்டம் சரவணம்பட்டி சிவானந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி (58).நேற்றுமுன்தினம் சபரிமலைக்கு வந்தார். அதிகாலையில் நீலிமலை அருகே வந்தபோது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

உடன் வந்தவர்கள் அவரை அருகில் உள்ள சிகிச்சை மையத்திற்கு கொண்டு சென்றனர்.ஆனால் அதற்குள் கிருஷ்ணசாமி இறந்தார்.இதேபோல் ஆந்திரா மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரன் (45) என்பவர் பம்பை அருகே மாரடைப்பால் மரணமடைந்தார். (ஸ்ரீ)

# டிராவிட் சதம் தோனி அபாரம்

# இந்தியா முதல் இன்னிங்ஸில் 566



(நாக்பூர்)

டிராவிட், தோனியின் பலமான இணைப் பாட்டத்தின் மூலம் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 566 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் தீர்க்கமான மூன்றாவது மற்றும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 20ஆம் திகதி நாக்பூரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 193 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 292 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மேலதிகமாக 4 ஓட்டங்களை எடுத்த போது3 ஆவது விக்கெட்டையிழந்தது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 129 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 61 ஓட்டங்களை எடுத்து அறிமுக வீரர் மைக்கேயின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் ஹோப்கிங்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வி.வி.எஸ்.லக்ஸ்மன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

தொடர்ந்து களமிறங்கிய சுரேஷ் ரெய்னா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 328 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 6 ஆவது விக்கெட்டுக்காக டிராவிட்டுடன் இணைந்த தோனி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இதில் ராகுல் டிராவிட் 256 பந்துகளில் 31 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

மறுமுனையில் அணித்தலைவர் தோனி 66 பந்துகளில் அரைச்சதம் கடக்க இந்திய அணி 400 ஓட்டங்களை தாண்டியது.

இந்த ஜோடியைப் பிரிக்க நியூசிலாந்து அணித்தலைவர் விக்டோரி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்காமல் போக இந்திய அணி 500 ஓட்டங்களை எட்டியது.

இதில் தோனி 96 ஓட்டங்களை எடுத்த நிலையில் உபாதையால் தடுமாறினார். இதனால் சக ஓட்டவீரராக (By Runner) சுரேஷ் ரெய்னா அழைக்கப்பட்டார்.

எனினும் அணித்தலைவர் மகேந்திரசிங் தோனி 156 பந்துகளில் (12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 98 ஓட்டங்களை எடுத்து டானியல் விக்டோரியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சதம் பெறும்வாய்ப்பை 2 ஓட்டங்களால் தவறவிட்டார்.

இதில் டிராவிட் - தோனி ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்காக 193 ஓட்டங்களை இணைப் பாட்டமாகப் பகிர்ந்தனர்.

அடுத்து ஹர்பஜன்சிங் களமிறங்க மறுமுனையில் ராகுல் டிராவிட் 396 பந்துகளில் (21 பவுண்டரிகள் உட்பட) 191 ஓட்டங்களை எடுத்த போது வில்லியம்ஸனின் பந்துவீச்சில் குப்திலிடம் பிடிகொடுத்தாட்டமிழந்தார்.


தொடர்ந்து இஷாந்த் சர்மா களமிறங்க மறுமுனையில் ஹர்பஜன் சிங் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 566 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் இஷாந்த் சர்மா 7 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 3 விக்கெட்டுக்களையும் மார்டீன் 2 விக்கெட்டுக்களையும் சௌத்தி, மைக்கேய், வில்லியம்ஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 373 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 24 ஓட்டங்களை எடுத்தது.



இதில் மக்குலம் 15 ஓட்டங்களுடனும் ஹோப்கிங்ஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 9 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 349 ஓட்டங்களை எடுக்க வேண்டும்.

# நாட்டின் எதிர்காலத்தைக்...

**முடிவுரைக் கருத்துக்கள்**

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத்திட்டத்தினை நான் சுருக்கமாக தருகின்றேன். 2011 இல் மொத்த வருமானமாக ரூபா 963 பில்லியன் எதிர்வு கூறப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவினம் ரூபா 1,017 பில்லியனாக இருக்கும். எனவே எமது வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படைப் பற்றாக்குறை ஏறக்குறைய ரூபா 54 பில்லியனாகும். உட்கட்டமைப்பு, மனி தவளங்கள், கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட எமது பிரதான முதலீடுகள் இப்பற்றாக்குறையினை விட அதிகமாக உள்ளது என்ற வகையில் 2011 இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைத் தொகையானது ரூபா 434 பில்லியனாகும்.

இதுமொத்தஉள்நாட்டுஉற்பத்தியில் 6.8 சதவீதமாகும். எமது நடுத்தரக் கால நோக்கமானது, எமது அடிப்படை பற்றாக்குறையினை இல்லாதாக்குவதாகவும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 5 சதவீதத்தினை நோக்கி நகர்த்துவதற்கு உரியதாகும். அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2011, இது தொடர்பானவிபரங்களைதருகின்றது. கௌரவ சபாநாயகர் அவர்களே, இப்பற்றாக்குறையானது தோல்வியடைந்தவங்குரோத்துகம்பனிகளை பிணை எடுப்பதற்கானதல்லஎன்பதை நவீன முற்போக்குவாத பண்டிதர்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இப்பற்றாக்குறையானது இலவச சேவைகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்கான ஏற்பாடுகளினால் உருவானதாகும்.

இவ் வரவு செலவுத்திட்டத்தில் எனது முயற்சியானது எமது அடைவுகளை நிலைத்திருக்கச் செய்வதும் எமது பொருளாதாரத்தில் எதிர்கால ஆபத் துக்களை முகாமை செய்வது மாகும். நாம் பொருளாதார வளர்ச்சி விகிதத்தினை அண்ணளவாக 8 சதவீதமாக அடைந்துள்ளோம். பணவீக்கம் ஏறக் குறைய 6 சதவீதமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. வறுமை 7.6 சதவீதத்தினாலும், வேலைவாய்ப்பின்மை 5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவை அனைத்தும் 5 வருடங்களுக்குள் அடையப் பெற்றவையாகும். இது எமது அபிவிருத்தி உபாயத்தினைச் சிறப்பாக சுட்டிக் காட்டுகின்றது. மத்திய வங்கி 7 பில்லியன் ஐ.அ. டொலர்களை ஒதுக்குகளாக உருவாக்கி உள்ளது. எமது வங்கித்தொழில் முறைமை மேலும் 1.5 பில்லியன் ஐ.அ.டொலர்களை கொண்டுள்ளது.

இந்த வகையில் பொருளாதாரமானது போதியளவு வெளிநாட்டு வளங்களை கொண்டுள்ளது. இவை அனைத்தும் நாம் அடைந்து கொண்டவை என்ற வகையில் நாம் பெருமைப்படல் வேண்டும். ஏறக்குறைய 5-7 சத வீத குறைந்த பணவீக்க விகிதம், ஏறக்குறைய 7-8 சதவீத பொருளாதாரவளர்ச்சி மற்றும் வறுமையிலிருந்து விடுபட்ட ஒரு சமூகம் என்பது எமது நடுத்தரக் கால இலக் குகளாகும். இதனை நோக்கிய எமது கூட்டு முயற்சி நடுத்தரக் காலத்தின் போது எமது பொருளாதாரத்தில் சாத கமான போக்கினை பேணிக் கொள்வதற்கு முடியுமாக இருக்கும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, தலைக்குரிய வருமானத்தினை 4,000 ஐ.அ.டொலர்களுக்கு மேல் அதிகரிக்கச் செய்வது மாத்திரம் எமது உபாயத்தின் நோக்கமல்ல. அத்தகைய உயர் வருமானத்தினை மக்கள் அனுபவிப்பதற்கு சமமான வாய்ப்புக்கள் தேவை. பாதைகள், மின்சாரம், நீர், தொலை தொடர்புகள், வீடமைப்பு மற்றும் சுகாதார வசதிகளை சமமாக அடைந்து கொள்ளல் வேண்டும். இந்த உட்கட்டமைப்பு வசதிகள் அவர்களது அர்த்தமுள்ள பொருளாதார வாழ்க்கைக்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. விவசாயிகள் நீர், விதை, கடன் மற்றும் உரமானியத்தினை எதிர்பார்க்கின்றனர். சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் அவர்களது சொந்த வியாபாரத்தினை புரிவதற்கான பிரச்சினைகளற்ற சூழலொன்றினை வேண்டி நிற்கின்றனர்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, நாம் வருங்காலத்தைப் பற்றி திட்டமிடுவோம். சிறந்ததொரு எதிர்காலத்தை கட்டி யெழுப்புவதற்கு நிகழ்காலத்தை முகாமை செய்வது எமது ஒரே பொறுப்பாகும். அது வாய்ப்புக்களைக் கொண்ட எதிர் காலமாக இருத்தல் வேண்டும். எமக் கிடையே உள்ள பேதங்களை ஒதுக்கி வைத்து விட்டு நாட்டை முன்னிலைப் படுத்துவோம். எமது சிறுவர்களின் எதிர்காலத்திற்கு முன்னுரிமை வழங்குவோம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, எனது கொள்கை உபாயம் அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவம் அனைத்தும் எமது சிறுவர்களின் வளமான எதிர்கால மொன்றை கட்டியெழுப் புவதற்கான தாகும். அவர்களது எதிர்காலம் அறிவுமிக்க பொருளாதாரமொன்றிலேயே தங்கியுள்ளது.

**அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளின் மீளாக்கம்**

ஜனவரி 2011 இலிருந்து செயற்படுத்தப்படுகின்றவகையில், அனைத்து அரச ஊழியர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 5 சதவீதத்திற்கு சமமான சிறப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

தற்பொழுது வழங்கப்படுகின்ற வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மாதாந்தம் 5,250 ரூபாயிலிருந்து மாதாந்தம் 5,850 ரூபாய் ஆக அதிகரிக்கப்படும். இவ்வதிகரிப்பு பதவிநிலை உத்தியோகத்தர் அல்லாதவர்களுக்கு 2011 ஜனவரியிலிருந்தும் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு 2011 யூலையிலிருந்தும் வழங்கப்படும்.

2011 ஜனவரியிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற வகையில், பொது நிர் வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (VIII) இற்கு ஏற்ப அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம்வழங்கப்படும்.

மேலும் ஆசிரியர்களுக்கு சீராக்கப் பட்ட சம்பள முரண்பாடுகளுக்கு கொடுபட வேண்டிய நிலுவைகளும் வழங்கப்படும்.

2011 ஜனவரியிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற வகையில் பல்கலைக் கழக கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு கல்விசார் கொடுப்பனவு வழங்கப்படும், நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற நீதித்துறை உறுப்பினர்களுக்கு ஆளுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படும். மற்றும் வைத்தியர்களுக்கான சேவை அழைப்புக் கொடுப்பனவு 25 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படும்.

சர்வதேச அங்கீகாரமுள்ள வெளியீட்டாளர்களால் வெளியிடப்படும் ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளைச் செய்கின்ற பல்கலைக் கழக கல்விசார் உத்தியோகத் தர்களுக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர் களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான மாதாந்த ஆய்வுக் கொடுப்பனவு வழங்கப்படும். இக்கொடுப்பனவு 2011 ஜனவரியிலிருந்து தொடங்குகின்ற 2 வருட காலப்பகுதிக்கு, இக் காலப்பகுதியில் அத்தகைய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்டவற்றிற்கே வழங்கப்படும்.

2011 ஜனவரியிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற வகையில், பொது நிர்வாக சுற்றறிக்கை இல.6/2006 (IV) இன் அமுலாக்கத்திற்கு நிர்வாகத் தடைகளாக உள்ளவற்றை நீக்குமுகமாக சம்பள சீரமைப்புக்கள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

**ஓய்வூதியம் பெறுநர்களுக்கான கொடுப்பனவுகளின் மீளாக்கம்**

2011ஜனவரியிலிருந்துசெயற்படுத்தப்படுகின்ற வகையில், தற்போது வழங்கப்படுகின்ற ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மாதாந்தம் 2,375 ரூபாயிலிருந்து மாதாந்தம் 2,675 ரூபாய் ஆக அதிகரிக்கப்பட்டு வழங்கப்படும்.

2011 ஜூலையிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற வகையில், 01.01.2004 இற்கு முன்பு ஓய்வுபெற்ற ஓய் வூதியர்களுக்கு மாதாந்தம் 750 ரூபாய் அதிகரிப்பு வழங்கப்படு கின்ற வேளையில், 01.01.2004 தொடக்கம் 31.12. 2005 காலப்பகுதி யில் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் 250 ரூபாய் அதிகரிப்பு வழங்கப்படும். இது ஓய்வூதியத்தில் இருக்கின்ற முரண்பாடுகளை திருத்தும் வகையில் செய்யப்படும்.

# ஜனாதிபதியின் அம்பாறை இணைப்பாளர் இனியபாரதிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தனை இழிவான வார்த்தைகளை பிரயோகித்து கொலை செய்வதாக அச்சுறுத்தியதாக குற்றச்சாட்டப்பட்ட, ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் இனியபாரதி என்றழைக்கப்படும்கந்தசாமி நிசாந்தனுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனையை கல்முனை மேல் நீதிமன்றம் விதித்து தீர்ப்பளித்தது.

2007.06.11ஆம் திகதி திருக்கோயில் பகுதியில் வைத்து தன்னை, இனியபாரதி மிரட்டியதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் கூறியிருந்தார்.

நேற்று திங்கட்கிழமை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இனியபாரதி தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

இரண்டாவது தடவையாக குற்றப்பத்திரம் வாசித்து காட்டப்பட்டபோது தனது குற்றத்தை மீண்டும் அவர் ஏற்றுக்கொண்டதையடுத்து இவரை குற்றவாளியென நீதிமன்றம் கண்டது.

எனினும் பொதுமக்களுக்கான சேவையில் இனியபாரதி ஈடுபட்டுக்கொண்டிருப்பதினால் அவரை குற்றவாளியா கருதினாலும் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையும் 25ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் விதித்து கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பளித்தார்.

25 ஆயிரம் தண்டப்பணத்தை கட்டத் தவறினால் மேலும் ஆறு மாதகால கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

அத்துடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தில் வேறுஏதாவது குற்றத்தில் ஈடுபட்டால் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையும் சேர்த்து அனுபவிக்க வேண்டி ஏற்படும் எனவும் குறிப்பிட்டு நீதிபதி தீர்ப்பளித்தார். (ச-5)

# வடக்கில் கண்ணிவெடி அகற்ற அமெரிக்க அரசாங்கம் உதவி!

(கொழும்பு)

வடபகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக அமெரிக்க அரசாங்கம்ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான கண்ணிவெடியகற்றும் உபகரணங்களை நேற்று அன்பளிப்புச் செய்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அமெரிக் தூதரகத்தின் பிரதித் தூதுவர் சார்ஜ் பவுலர் குறித்த உபகரணத் தொகுதியினை தளபதி ஜெகத் ஜெசூரியவிடம் ஒப்படைத்துள்ளார்.

அமெரிக்கா அன்பளிப்புச் செய்துள்ள கருவிகளில் கண்ணிவெடி அகற்றும் கருவிகள் மட்டுமன்றி அதற்கான வாகணங்களும் கூட உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-5)

# வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள்

(கொழும்பு)

2011ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் புதுவரிகள் அறிமுகப்படுத்தப்பட்டும் இன்னும் சில வரிகள் அதிகரிக்கப்பட்டும் உள்ளன.

பெரும்பாலும் அவ்வாறான வரிகள் நடுத்தர மக்களின் வாழ்வுடன் நேரடியாக செல்வாக்குச் செலுத்த கூடியனவாக அமைந்திருப்பவை ஆகும்.

எடுத்தக்காட்டாக புதிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வருடாந்த வாகன அனுமதி பத்திரத்திற்கான கட்டணம் 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதிதாக கேபிள் தொலைக்காட்சி சேவைகளுக்கும் வரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் கேபிள் தொலைக்காட்சி பாவனைக்கான நுகர்வோர்கட்டணம்கணிசமான அளவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கேபிள் தொலைக்காட்சி வரி மூலம் கிடைக்கும் தொகையை இலங்கை திரைப்படத் துறை மேம்பாட்டுக்கு பயன்படுத்தப் போவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு செலவுத் திட்ட உரையின்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பல்கலைக்கழக மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்.பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த கலைப்பீட முதலாம் வருட மாணவன் ஒருவர் நேற்றிரவு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.அதிகளவான குளிசைகளைப் போட்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இம் மாணவன் ஆபத்தானநிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் போராளியான இவர் புனர்வாழ்வு பெற்று அண்மையில் தான் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டது.இதேவேளை இன்று நடைபெறவுள்ள பரீட்சைக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தஅவர் திடீரென தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பகிடிவதையே காரணமாக இருக்கலாம் என சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.சிரேஷ்ட மாணவர்கள் விடுதிக்கு வந்து இவரை சந்தித்ததாகவும் கூறப்பட்டது.இது தொடர்பில் துணைவேந்தர் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டதாக கூறப்பட்டது .(ச)

# இந்திய மீன...

வலைகளையும், மீன்பிடிமுறையையும் பயன்படுத்துவதனால் தமக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக இலங்கை மீனவர்கள் தொடர்ச்சியாக முறையிட்டு வந்துள்ளனர்.

இதன் காரணமாக இரு நாட்டு மீனவர்களிடையேயும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் பல மட்டங்களில்எடுக்கப்பட்டுவந்துள்ளன.இந்தவகையில் இந்த வாரம் இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் மற்றும்அதிகாரிகளுடன இந்திய மீனவர் பிரதிநிதிகள் குழுவொன்று பேச்சுக்கள் நடத்தவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் குறித்து கருத்து வெளியிடுகையில், இந்திய தரப்பு மீனவர் பிரதிநிதியாகிய தேவதாஸ் இலங்கைக் கடற்பரப்பில் தாங்கள் மீன்பிடிப்பது தொடர்பில் மீனவர்கள் மட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த தவரட்ணம், இவ்வாறான கோரிக்கை ஒன்று இந்திய மீனவப்பிரதிதிகளினால் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின்போது முன்வைக்கப்பட்டுள்ளதே தவிர அது குறித்து இலங்கை மீனவர்கள் தரப்பில் முடிபு எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனக் கூறுகின்றார். (ச-5)

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்...

2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை நேற்று பிற்பகல் 1.35 மணியளவில் ஆரம்பமாகி 4.00 மணியளவில் நிறைவடைந்தது.

அண்மைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட மிகக் குறுகிய வரவு செலவுத் திட்ட உரை இதுவென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தாய் நாட்டை மிளரச் செய்ய தாம் திடசங்கர்ப்பம் பூண்டுள்ளதாகவும் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற உள்ளதாகவும் தனது வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் பிரிவினைவாத யுத்தத்திற்கு எந்தவொரு சந்தர்ப்பமும் வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் முக்கியமானவை வருமாறு,

பாதுகாப்பு படையினரின் பொருளாதார அபிவிருத்திக்காக மூன்று பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

படைவீரர் குடும்பங்களில் பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

உள்நாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணம் ரூபாய் 2 லிருந்து 1.50 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு தொலைபேசிக்கு கட்டணம் 2 ரூபாயாக அதிகரிப்படவுள்ளது.

மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான வரி விலக்கு அளிக்கப்பட உள்ளது.

விமான சேவை நிறுவனங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

குறிப்பாக மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படவுள்ளது.

மதுபானங்கள், சிகரட் வகைகள் மற்றும் கசினோ ஆகியவற்றுக்கான வரி 35 வீதத்திலிருந்து 40 வீதமாக அதிகரிக்கப்படும்.

பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கப்படும்.

பொறியியல் துறை, திட்டமிடல், விவசாயம் மற்றும் ஏனைய துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

அரசாங்க வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்களில் முகாமைத்துவ பயிலுனர்களாக ஆயிரத்து ஐந்நூறு பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் 1500 தாதியருக்கு தொழில் வாய்ப்பு அளிக்கப்பட உள்ளது.

அரசாங்க ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரின் கொடுப்பனவுகள் 5 வீதத்தினால் உயர்த்தப்பட உள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாழ்க்கைச்செலவு படி 600 ரூபாயினால் உயர்த்தப்படவுள்ளது.

6 இலட்சம் ரூபாயிற்கு அதிகமாக வருடாந்த சம்பளத்தை ஈட்டும் தனி நபர்களிடம் வரி அறவீடு செய்யப்படவுள்ளது.

அதாவது 50 ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம் ஈட்டும் சகல நபர்களிடமும் வரி அறவீடு செய்யப்பட உள்ளது.

30 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக அரசாங்க ஊழியர்களிடமும் வரி அறவீடு செய்யப்பட உள்ளது.

ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்குவோரிடமிருந்து ஒரு படுக்கையறைக்கு தலா 20 அமெரிக்க டொலர் வரி அறவீடு செய்யப்படவுள்ளது.

பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கான வரி 25 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

வங்கி வைப்புச் செய்த பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளும்போது அறவீடு செய்யப்பட்ட வரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

90 அலகிற்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து 8 வீத வரி அறவீடு செய்யப்படவுள்ளது.

மென்பொருட்களுக்காக அறவீடு செய்யப்பட்டு வந்த தேச நிர்மாண மற்றும் பெறுமதி சேர் வரிகள் நீக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த வருமானம் 986 பில்லியன் ரூபாய் எனவும் செலவுகள் 1419 பில்லியன். (ச-5)

# பிரபாகரனுக்கு வழ...

தெரிவித்து உள்ளவை வருமாறு,

நான் அரசியல் தீர்வு யோசனை ஒன்றை மனதில் உத்தேசித்து வைத்திருக்கின்றேன். அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும் இத்தீர்வு யோசனையை ஏற்று அங்கீகரிக்க வேண்டி உள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு இருப்பது மிகவும் முன்னேற்றகரமான நிலை ஆகும். எம்மால் அவர்களுடன் பேச்சுக்களை இப்போது ஆரம்பிக்க முடியும். தமிழ் மக்களுக்கு புதிய அரசியல் தலைமைத்துவம் தேவை.

எனவே வட மாகாண தேர்தலை அடுத்த வருடம் நடத்த முன்னுரிமை கொடுத்துள்ளேன். இதன் மூலம் தமிழ் மக்களின் மனங்களையும் இதயங்களையும் வெல்ல முடியும்.

பிரபாகரனுக்கு எது தேவையாக இருந்ததோ அதை நாம் எவருக்கும் வழங்க மாட்டோம் என்பதை தமிழ் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே தமிழ் கட்சிகள் யதார்த்தமாகவும் நீதியாகவும் பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகளை கட்டாயம் முன்னெடுத்தல் வேண்டும் என்றார். (ச-5)


ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

மாணவர்கள் ,சிறுவர்கள் ,வெளிநாட்டிற்கு போகிறவர்கள் எவரும் கற்றுக் கொள்ளலாம்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

(3108)

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.


# புதிய அமைச்சரவை...

சர்கள் பொறுப்பை வகித்த நியோமல் பெர்ணான்டோ, சரத் குணரத்ன ஆகியோராவர்.

நியோமால் பெர்ணான்டோ உள்நாட்டு வர்த்தகம் மற்றும் கூட்டுறவு முன்னாள் பிரதியமைச்சராக கடமையாற்றியிருந்தார்.இம்முறை அவரது பொறுப்பு ஏ.ஆர்.எம்.அப்துல் காதருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மற்றையவர் கம்பஹா மாவட்டத்தின் சரத் குணரத்ன ஆவார். முன்னைய அமைச்சரவையில் அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை பிரதியமைச்சராக பதவி வகித்தார்.

இவர்கள் இம்முறை அமைச்சரவையில் விடுபட்டதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.சில வேளைகளில் இவர்களுக்கு எதிர்காலத்தில் அமைச்சுப் பொறுப்புக்கள் ஒதுக்கப்படும் பட்சத்தில் அமைச்சரவை இன்னும் விரிவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.